Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

G. M. K.
COMMUNICATION
302, Temple Rd, Nallur, Jaffna.
TP:- 021-2223760 FAX:- 021-4591194
♥ IDD ♥ LOCAL ♥ NET 2 PHONE (7/=)
♥ FAX ♥ PHONE CARDS ♥ COMPUTER WORKS
♥ AIR TICKETING ♥ BUS BOOKING

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 08 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 10 (23.12.2004) வியாழக்கிழமை இதழ்: 84

# அரசாங்கத்தின் புதிய நிகழ்ச்சி நிரல்

# ஆக்கபூர்வமாக அமையவில்லை!

## விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் அதிருப்தி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மூலமாக - லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத் திடம் இலங்கை அரசாங்கத்தால் கையளிக்கப்பட்ட பேச்சுக்கள் தொடர்பான புதிய நிகழ்ச்சி நிரல் ஆக்கபூர்வமான தாக அமையவில்லை என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்தம்பிதமடைந்திருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சிநிரல் அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால மூலம் நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஊடாக கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

புலிகளிடம் கையளிக்கப்பட்ட இந்த புதிய நிகழ்ச்சி நிரல் புலிகளின் இடைக்கால வரைபையும் அதற்கு மாற்றாக அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தையும் ஆராயலாம் என்பதை உள்ளடக்கியதாக இருப்பதாகத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள், இந்த நிகழ்ச்சிநிரல் ஆக்கபூர்வமான தாக அமைய வில்லை என்றும் அதிருப்தி தெரிவித்தனர்.

தமிழ்மக்களின் முழுமையான ஆணையைப் பெற்ற இடைக்கால (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் போக்கை கண்டித்து கைதடி மக்கள் போராட்டம்!






(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறும், சமாதான வழிமுறைகளிலிருந்து ஒதுங்கி அரசாங்கம் யுத்தமுனைப்பில் ஈடுபட்டிருப்பதைக் கண்டித்தும் நேற்று தென்மராட்சியில் இரண்டாவது மனித சங்கிலி எழுச்சிப் போராட்டம் நடத்தப்பட்டது.

கைதடி சந்தியிலிருந்து ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் கூடி நின்று நேற்றுக்காலை 10.15 மணி முதல் 11.15 வரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள், அரச ஊழியர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

"பேச்சுவார்த்தை என்று இழுத்தடித்து தமிழர்களின் எதிர்காலத்தை சிதைக்காதே", "உண்மையாக மனந்திறந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பி", தமிழர் சுதந்திரத்தில் அரசே தலையிடாதே, "எமது தலைவர் பிரபாகரன்" போன்ற சுலோக அட் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா பிரிட்டன் பயணம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா நேற்றுப் பிற்பகல் பிரிட்டன் பயணமானார். எனினும், அவர் எவ்வளவு காலம் லண்டனில் தங்கியிருப்பார் என்ற தகவலை ஜனாதிபதி செயலகம் தெரிவிக்கவில்லை.

இதேவேளை ஜனாதிபதி நாடுதிரும்பும் வரை பதில் பாதுகாப்பு அமைச்சராக ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் பதில் கல்வி அமைச்சராக தினேஸ் குணவர்த்தனவும் கடமையாற்றுவார்கள் என ஜனாதிபதி செயலகம் அறி (12 ஆம் பக்கம் பார்க்க)

## போராளி ஒருவர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது மட்டக்களப்பு நகரில் நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் போராளி ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - அரசடிச் சந்தியிலுள்ள ஆஞ்சநேயர் மரக்காலைக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

### நோர்வேயைச் சாடும் வகையில்

## ஜே.வி.பி. விடுத்த அறிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம்!

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இணைந்து ஜே.வி.பியை விமர்சித்து வெளியிட்ட அறிக்கைக்குப் பதிலாக - ஜே.வி.பி. வெளியிட்ட அறிக்கையில், நோர்வேயைக் கடுமையாகச் சாடியுள்ளமையானது சமாதான முயற்சியை ஆபத்தான கட்டத்துக்குள் இட்டுச்செல்லவே வழிவகுக்குமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றி லங்ஸ்ரீட் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

நோர்வேயை விமர்சித்ததும், நியாயமற்ற வகையில் பழிசுமத்தியமையுமானது சமாதான முயற்சிகளை ஆபத்தான கட்டத்திற்கு இட்டுச் சென்றுள்ளதை தெளிவாக புரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

வார்த்தைகளானது விளைவுகளை ஏற்படுத்தக்கூடியன. ஜே.வி.பியின் இந்த வார்த்தைகள் இனந்தெரியாத விளைவுகளை ஏற்படுத்தும்.

ஜே.வி.பி மற்றும் பிற சக்திகள் நோர்வேயை விமர்சிப்பதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென உதவி வழங்கும் நாடுகள் நேரடியாகவே கேட்டிருந்தன. இதன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் சமாசத்தினர் தமிழ்ச்செல்வனை சந்தித்தனர்!

### மகஜரும் கையளிப்பு



யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் சங்கங்களின் சமாசத்தினர் - விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் மனு ஒன்றையும் கையளித்தனர்.

நேற்று முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாண சபை

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி
ஆஅவகடன் இல. - 2043 - சிறீ (எஸ்எவ்)

## கேள்வி அறிவித்தல் - இல. 37

1) போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணவேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும் படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2) இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும், NECORD திட்டத்தின், திட்டப் பணிப்பாளர் சார்பாகத் திருகோணமலை மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| தொ இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆக குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | **MU/CAARP/IR/01** தொகுதி - 01 | முல்லைத்தீவு மாவட்ட கணுக்கேணி நீர்ப்பாசனத்திட்டத்திற்கான முதன்மை வேலைகள் புனரமைப்பு | **M5** (நீர்ப்பாசனம்) | 210,000/= |
| 02 | **MU/CAARP/IR/01** தொகுதி - 02 | முல்லைத்தீவு மாவட்ட கணுக்கேணி நர்பபாசனத் திட்டத்திற்கான வாய்ககால் புனரமைப்பு | **M7** (நீர்ப்பாசனம்) | 30,400/= |
| 03 | **MU/CAARP/IR/01** தொகுதி - 03 | முல்லைத்தீவு மாவட்ட கணுக்கேணி நீர்ப்பாசனத்திட்டத்திற்கான வாய்க்கால் புனரமைப்பு | **M7** (நீர்ப்பாசனம்) | **33,800/=** |
| 04 | **BT/CAARP/RD/01** தொகுதி - 01 | மட்டக்களப்பு மாவட்ட கரவெட்டி, மகிழவெட்டுவான் 0-1கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி | **M7** (நெடுஞ்சாலை, பாலங்கள்) | **29,000/=** |
| 05 | **BT/CAARP/RD/01** தொகுதி - 02 | மட்டக்களப்பு மாவட்ட கரவெட்டி, மகிழவெட்டுவான்1-2 கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி | **M7** (நெடுஞ்சாலை, பாலங்கள | 36,000/= |
| **06** | **BT/CAARP/RD/01** தொகுதி - 03 | மட்டக்களப்பு மாவட்ட கரவெட்டி, மகிழவெட்டுவான் 2-3 கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி | **M7** (நெடுஞ்சாலை, பாலங்கள்) | 25,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால; (**ICTAD**) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (**NCCASL**) உறுப்பினராக (**ICTAD** மேற்படி **M7** க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

iii. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ஆந் திகதிக்கு பின்பு தங்களை ஒப்பந்தகாரர்களாக பதிவு செய்து ஒத்ததன்மையான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ இத்தகைய வேலைகளை நல்ல முறையில் செய்து முடித்தவர்களாக இருக்க வேண்டும். இது வாடிக்கையாளரிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிபடுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

iv. "**ICTAD**|' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

v. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

vi. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவாராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் **CAARP** வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை திட்டப் பணிப்பாளர் அலுவலகம், **NECORD**, 55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026-2227434, தொலைநகரி 026 - 2227401, மின்னஞ்சல் **necord@sltnet.lk**).

6. கேள்வி ஆவணங்கள் 2004.12.24 இலிருந்து 2005.01.07 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000/= ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

7. கேள்வி கோருபவர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும் விலையிடப்பட்ட கேள்விகளின் இரண்டு பிரதிகளும் பொறிவைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் 8 ஆவது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட திகதி, நேரத்தில் கையளிக்கப்படவேண்டும்.

8. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் ***தலைவர், கேள்விச்சபை, NECORD, 55 கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை*** என்ற முகவரிக்கு ***2005 தை 17 முற்பகல் 11.30 மணிக்கு*** முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டியே ஒப்பந்தக் கூட்டமொன்று ***2005 தை 07 முற்பகல் 11.30 க்கு NECORD, 55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலையில*** நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த. லங்காநேசன்,**
**கேள்விச்சபை தலைவர்.**

(3507)

# உரும்பிராய் தபால் நிலையம் உடைத்து திருடர் கைவரிசை!

## ரூபா 1,20,000 பெறுமதியான முத்திரைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் தபால்நிலையம் நேற்றுமுன்தினம் இரவு ஓடு பிரிக்கப்பட்டு அங்கிருந்த 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகள் திருடப்பட்டதுடன் அங்கிருந்த தளபாடங்கள் சிலவும் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை தபால்நிலையத்தைத் திறப்பதற்காக சென்றிருந்த வேளை ஓடு பிரிக்கப்பட்டிருந்தது. அலுவலகத்தினுள் இருந்த மேசைகள், அலுமாரிகள் உடைக்கப்பட்டிருந்ததுடன் இரும்புப்பெட்டி உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகள் திருடப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்துக்குச் சென்றிருந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் தடயங்களை பதிவு செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இதனால் தபாலகப் பணிகள் நேற்று இடம்பெறவில்லை.

திருடப்பட்ட பொருட்கள் பற்றிய மதிப்பீடுகள் முடிவடையாமையால் திருடப்பட்ட பொருட்களின் பெறுமதி பற்றி முழுமையாக அறியமுடியாதிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குடாநாட்டிலுள்ள வர்த்தகநிலையங்களில் தனிநபர்கள் பெருமளவான முத்திரைகள் விற்பனை செய்வதற்கு வந்தால் அவை தொடர்பான விபரங்களை பொலிஸாருக்குத் தெரியப்படுத்துமாறு யாழ். வர்த்தகர்களிடம் யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

# மன்னார் அஞ்சல் அத்தியட்சகராக குமரகுரு நேற்றுமுதல் நியமனம்!

(யாழ்ப்பாணம்)

வடமாகாண நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய வி. குமரகுரு மன்னார் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராக நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு தற்போது அஞ்சல் அத்தியட்சகராகக் கடமையாற்றிவரும் எஸ்.சிவராஜசிங்கம் தற்காலிக நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு தபால் நிலைய அதிபராகக் கடமையாற்றிய தீ.பிறேமதாஸ், ஆறு மாதகால பயிற்சிநெறிக்குச் செல்வதால் அவரது இடத்துக்கு கரவெட்டி அஞ்சலக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய பி. சந்திரதாஸ் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு அஞ்சல் அதிபர் எஸ்.கணேசமூர்த்தி ஆறு மாதகால பயிற்சிக்குச் செல்வதால் அவரது இடத்துக்கு வல்வெட்டித்துறை அஞ்சல் உத்தியோகத்தர் கே.செல்வராசா தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# உலர் உணவு சேகரிக்கும் பணி குடாநாட்டில் நேற்று ஆரம்பம்!

கிழக்கு மாகாணத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் குடாநாட்டில் உலர் உணவு சேகரிக்கும் பணி நேற்று ஆரம்பமானது.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

குடாநாட்டில் மாவட்ட ரீதியாகவும், வலய ரீதியாகவும், கோட்டர்தியாகவும் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் உலர் உணவுப் பொருட்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கிழக்கில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகன அணியுடன் உலர் உணவு சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு உதவும் வகையில் சாவகச்சேரி ப.நோ.கூட்டுறவு சங்கத்தால் உலர் உணவு பொருட்களை சேகரிக்கும் பணியை ஆரம்பித்தனர்.

இதன் முதற் கட்டமாக சங்கம் தனது கிளைகள் மூலம் உலர் உணவுப் பொருட்களை சேகரிக்கும் நடவடிக்கையை நேற்று ஆரம்பித்தது.

இதன்மூலம் சேகரிக்கப்படும் உலர் உணவுப் பொருட்கள் கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

கிழக்கு மக்களுக்கு உதவுவதற்கென நேற்று ஆரம்பமான உலர்உணவுப் பொருட்கள் சேகரிக்கும் பணிக்கு பெருமளவிலான மக்கள் உணவுப் பொருட்களை வழங்வருகின்றனர். (29)

# சின்னஞ்சிறு செய்திகள்!

## கைவேலைக் கண்காட்சி!

பிரித்தானிய வர்த்தகக் கல்லூரியின் வடமராட்சி - புலோலி வளாகத்தில் சிறார்களின் கைவேலை கண்காட்சி இன்றும் நாளையும் மு.ப. 10.00 முதல் பி.ப.6.00 வரை நடைபெறுகின்றது.

## முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா நிகழ்வு!

யாழ். மாநகர சபை முன் பள்ளி மாணவர்களின் வருடாந்த கலைவிழா நிகழ்வு இன்று பி.ப 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாநகரசபை ஆணையாளர் கலாநிதி குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலைநிகழ்வில் பிரதம விருந்தினராக சி.வி.கே சிவஞானமும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ச.செழியன் மற்றும் யாழ்மாநகரசபைச் செயலாளர் குலநாயகம், மங்கயற்கரசி பெண்கள் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் திருமதி கமலா குணராஜா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (31)

## மேஜர் முரளியின் 17 ஆம் ஆண்டு நினைவு

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளியின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு கோப்பாய் - உரும்பிராய் வீதியில் அமைந்துள்ள அவரது நினைவுத் தூபிக்கு முன்பாக நடைபெறவுள்ளது. தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

## திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு!

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் சிங்கள மொழியை கற்கை நெறியாக மேற்கொண்டிருந்த மாணவர்களை அவர்களுடைய மாணவர் பதிவு புத்தகத்துடன் யாழ். பிராந்திய நிலையத்திற்கு சமுகம் தந்து புத்தகங்களை பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரா கேட்டுள்ளார்.

## வடமேல் மாகாணசபையில் முதன் முறையாக தமிழர்!

வடமேல் மாகாண சபையின் 17 வருட வரலாற்றில் முதலாவது தமிழ் உறுப்பினராக கா.இராதா கிருஷ்ணன் நேற்றுமுன்தினம் பதவியேற்றார். குருநாகலில் அமைந்துள்ள வடமேல் மாகாண சபையின் மண்டபத்தில் - அவைத் தலைவர் தர்மசிறி திஸநாயக்க முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கடந்த மாகாணசபைத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்டு, மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்டவர்.

அண்மையில் புத்தளம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரின் மறைவை அடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டார்.

## கொழும்பு-மட்டக்களப்பு இடையே 'பாடுமீன்' கடுகதி ரயில் சேவை

கொழும்புக்கும் - மட்டக்களப்புக்கும் இடையில் 'பாடுமீன்' எனும் கடுகதி ரயில் சேவை இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து தமது அததியாவசிய தேவைகள் குறிதது, கொழும்புக்கு வரும் பயணிகள் பெருமளவு பணச் செலவையும், நேரவிரயத்தையும் எதிர்கொள்ள கின்றனர்.

எனவே அதனை நிவர்த்தி செய்து சொகுசு கடுகதியில் பயணம் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்துவதன் ஊடாக அவர்கள் தமது வேலைகளை உடன் நிறைவு செய்து, கொழும்பில் தங்கும் செலவுகளைக் குறைக்க வாய்ப்பாக இருக்கும் என, ரயில் சேவை பொது முகாமையாளர் தெரிவித்தார்.(தே,01)

# பேரினவாதிகளின் போக்குகளுடன் ஒத்துப்போகும் நிலையில் நாமில்லை!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

சிங்கள பேரினவாதத்தின் போக்குகளோடு அள்ளுப்பட்டுப் போகும் நிலையில் முஸ்லிம் மக்களுமில்லை, அந்த மக்களின் ஏகோபித்த குரலான முஸ்லிம் காங்கிரஸுமில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட குழுக் கூட்டத்தில், சமகால அரசியல் நிலை தொடர்பாக உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ரவூப் ஹக்கீம் தொடர்ந்து உரையாற்றுகையில் -

கடந்த எட்டு மாத காலமாக நாம் தன்மானத்தோடு எதிர்க்கட்சி வரிசையில் இருந்து வருகிறோம். இதனால், முஸ்லிம்கள் பதவிகளுக்காக சோரம் போகும் சமூகம் அல்ல என்பதை வெளிப் படுத்தியுள்ளதுடன், இதனைத் தமிழ் தேசியம் உட்பட முக்கிய சக்திகளை உணரவும் செய்துள்ளோம்.

முஸ்லிம்களின் கொள்கைப் போராட்டம் பற்றி தமிழர் மத்தியில் நன்மதிப்பு இருக்க வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரை மடக்குவதற்கு, பல சதிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு இடம் கொடுக்கவோ, அபிவிருத்திக்காக அரசிடம் கைகட்டிச் சேவகம் செய்யவோ நாம் ஒரு போதும் தயாரில்லை.

இன்று முஸ்லிம் காங்கிரஸிலிருந்து மக்களைப் பிரிக்கும் நோக்குடனே அபிவிருத்திகள் நடைபெற்று வருகின்றன.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் கொள்கை அடிப்படையில் இயங்கும் ஓர் இயக்கமாகவிருப்பதால், அதன் பலமே மக்கள் சக்திதான். அந்தப் பலத்தைத் துளியும் பிரிக்க முடியாது.

இன்று முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்று ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருப்பவர்கள், அதிகாரப் பதவிகளிலிருப்பவர்களெல்லாம் முஸ்லிம் காங்கிரஸின் தலைமையை விமர்சிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கூஜா தூக்கும் தலைமை என்ற ஆயுதத்தைப் பாவிக்கிறார்கள். இதுவே வேடிக்கைக்குரிய ஒரு விடயமாகும்.

நாம் அரசுடன் சேர்வதற்கு, இரு நிபந்தனைகளை முன்பு விதித்திருககிறோம். தனிதரப்பு கோரிகசை உட்பட, நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணயசபையாக மாற்றும் விடயத்தைக் கைவிட வேண்டுமென்ற எமது கோரிக்கைக்கு சாதகமான பதிலில்லை.

முஸ்லிம் காங்கிரஸின் நோக்கம் அபிவிருத்தி மட்டுமல்ல, எமது அடிப்படை இனப்பிரச்சினைத் தீர்வில், முஸ்லிம்களுக்கு நியாயமான, கௌரவமான தீர்வு கிடைகக வேண்டும் என்பதேயாகும்.

இதை நாம் வென்றாக வேண்டுமென்பதில் நாம் உறுதியுடன் செயற்பட்டு வருகிறோம். இந்தநிலையில் அடுத்த கட்ட அரசியலை நாம் மிக அவதானமாக அணுக வேண்டியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கவுக்கு இன்று ஏற்படுத்தப்பட்டுள்ள நிலை முழு ஜனநாயகத்தையும் கீழே போட்டு மிதித்த கதையாகவேயுள்ளது.

தேங்காய் திருடியவனுக்கு மரண தண்டனை வழங்கியது போன்ற நிலை இது. இதன் மூலம் எல்லாரையும் பயம் காட்டலாமென நினைக்கிறார்கள். இதே நேரம் நுஆவுடன் நாம் செய்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிப் பல்வேறு விமர்சனங்கள் பரப்பப்பட்டுள்ளன. எனத் தெரிவித்தார். (07)

# அரசு எதிர்க்கட்சிகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்த மகாநாயக்கர்கள் முயற்சி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கத்தையும், எதிர்க்கட்சிகளையும் பொது இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கு பௌத்த பீடாதிபதிகள் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர்.

மூன்று பீடங்களையும் சேர்ந்த மகாநாயக்க தேரர்களும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் விரைவில் சந்தித்து இது தொடர்பாக பேசவுள்ளனர்.

இது தொடர்பாக மல்வத்தை மஹா விகாரையின் திப்புட்டுவ சிறீ சுமங்கல தேரர் தெரிவிக்கையில்-

பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய அவசியம் இன்று எழுந்துள்ளது. இரு தரப்பினரும் உடன்பாட்டுக்கு வந்தால், அந்த உடன்பாட்டில் எட்டப்பட்ட தீர்வை விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி, அது நிராகரிக்கப்படுகிறதா, இல்லையா என்பதைப் பற்றிப் பார்க்கலாம்.

ஆனால் துரதிஷ்டவசமாக, அரசியல் சுயலாபத்துக்காக ஆளுக்காள் பிரிந்து நின்றுகொண்டு உடன்பாடு இல்லாத போக்கிலேயே அரசியற்கட்சிகள் தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தால் மட்டும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுவிட முடியாது. அதற்கு எதிர்க்கட்சிகளின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பும் வேண்டும்.

ஆகவே, அரசும், எதிர்க்கட்சிகளும் சிந்தித்துச் செயற்பட்டு வாய்ப்புக்களை உறுதி செய்து கொள்ள வேண்டும். பிரச்சினைக்குத் தீர்வுகாண பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவத்திலிருந்து தப்பியோடியோரில் 6577 பேர் விலகுவதற்குச் சந்தர்ப்பம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியோரை சேவையிலிருந்து விலக்குவதற்காக வழங்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத்தில் இராணுவ மன்னிப்பு வழங்கும் மையத்துக்கு சமூகமளித்திருந்த 19 ஆயிரத்து 372 பேரில் வழங்கப்பட்ட வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்ட 6577 பேர்களுக்குச் சேவையிலிருந்து விலகுவதற்குச் சட்டபூர்வமாக அனுமதி வழங்கப்பட்டதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேல்மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் வடமேல் மாகாணத்தில் குருநாகலிலும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களைச் சேவையிலிருந்து விலக்குவற்குச் சட்டபூர்வமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (தே)

## 362 அதிகாரிகள், படையினர் பயிற்சி முடித்து வெளியேற்றம்



தியத்தலாவவில் அணிவகுப்பை ஏற்கிறார் இராணுவத் தளபதி.



பூஸாவில் இராணுவ அணிவகுப்பை ஏற்கிறார் இராணுவப் பேச்சாளர்.

இராணுவப் பயிற்சி முடித்த 114 அதிகாரி கள் மற்றும் 248 காலாற்படையினர் இருவேறு பயிற்சி முகாம்களிலிருநது கடந்தவாரம் வெளியேறினர்.

தியத்தலாவ இரா ணுவ அக்கடமியில் பயிறசி முடித்த 114 பேர் 2 ஆம் லெப்டினன்ட் அதிகாரிகளாகக் கடந்த சனிக்கிழமை வெளியேறினர்.

இந்த நிகழ்வில் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட கலந்துகொண்டு, அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இதேவேளை காலி - பூஸா இராணுவ பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்துக்கொண்ட 248 காலாற்படையினரும் வெளியேறியுள்ளனர்.

நான்குமாத நெருக்கடிகால இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்ட இவர்கள் - இலகு காலாற்படைப் பிரிவில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க படையினரின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார்.

## அதிரடிப்படைக்கு ஆட்சேர்ப்பு அடுத்தமாதம் முதல் ஆரம்பம்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படைக்கு ஆட்சேர்க்கும் பணி அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் ஆயிரத்து 52 பேரை அதிரடிப்படைக்கு உள்வாங்குவதற்கான திட்டத்துக்கு நேற்று முன்தினம் பொலிஸ் ஆணைக்குழுத் தலைமை அதிகாரி ரஞ்சித் அபயசூரிய அங்கீகாரம் வழங்கியுள்ளார். இந்த 1,052 பேரில் 1,000 பேர் கொன்ஸ்டபிள் தரத்துக்கும் 52 பேர் சப்.-இன்ஸ்பெக்டர் தரத்துக்கும் பயிற்றுவிக்கப்படுவர் என்று விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்தவருட ஆரம்பத்தில் அரச வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆட்சேர்க்கும் பணி ஆரம்பமாகும்.

தமிழர் பிரதேசமான அம்பாறையில் விசேட அதிரடிப்படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த விமானங்கள் இன்று இலங்கை வரும்

ரஷ்யாவின் றொஸ்ரோவ் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான அன்ரனோவ் 32 ரக விமானங்கள் இரண்டும் இன்று இலங்கைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் உக்ரேனின் கீவ் நகருக்குத் திருத்தவேலைகளுக்காக அனுப்பப்பட்ட இரு விமானங்களும், திருத்த வேலைகளை நிறைவு செய்துகொண்டு கடந்த திங்கட்கிழமை நாடு திரும்பியவேளையில் விமானத்தில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அசர்பைஜான் நாட்டு பாகு விமான நிலையத்தில் தரையிறக்குவதற்காக அனுமதி கோரப்பட்டது.

ஆனால், பாகு விமான நிலைய அதிகாரிகள் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து, மிகவும் குறைந்தளவு எரிபொருளுடன் காணப்பட்ட விமானங்கள் இரண்டும், எரிபொருள் நிரப்புவதற்காக ரஷ்யாவின் றொஸ்ரோவ் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டன.

றொஸ்ரோவ் விமான நிலையத்தில் குறிப்பிட்ட இரு விமானங்களும் தரை இறங்குவதற்கான அனுமதி பெறப்படவில்லை என்றும், குறிப்பிட்ட விமானத்தில் பயணம் செய்த இரண்டு விமானப் படை உயரதிகாரிகளுக்கும், 12 சிப்பந்திகளுக்கும் ரஷ்ய நாட்டு விசா இல்லையெனத் தெரிவித்த விமான நிலைய அதிகாரிகள் - விமானங்களையும், விமானத்தில் இருந்தோரையும் தடுத்து வைத்தனர்.

இதையடுத்து வெளிவிவகார அமைச்சு ரஷ்ய அதிகாரிகளுடன் ராஜதந்திரப் பேச்சுக்களை நடத்தியதை அடுத்துத் தடுத்து வைக்கப்பட்ட விமானங்களும், விமானிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# எனது பந்துவீச்சு முறையை மாற்றிக்கொள்ள மாட்டேன்!

## அக்தர் கூறுகிறார்

(கராச்சி)

எனது பந்துவீச்சு முறையை மாற்றிக்கொள்ளமாட்டேன் என்று பாகிஸ்தான் வீரர் அக்தர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவரான அக்தர், 'ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்' என்று அழைக்கப்படுகிறார். இவர் 100 மைல் (160 கி.மீ) வேகத்தில் பந்துவீசி அதிவேகத்தில் பந்துவீசுபவர்கள் பட்டியலில் முதலிடத்திலுள்ளார்.

பொதுவாக வேகப்பந்து வீச்சாளர்கள் 80 முதல் 100 அடி தூரத்திலிருந்து ஓடிவந்து பந்துவீசுவார்கள். ஆனால், அக்தர் 120 அடி தூரத்திலிருந்து ஓடிவந்து பந்துவீசி வருகிறார்.

இவ்வளவு தூரத்திலிருந்து ஓடிவந்து அவர் பந்து வீசுவதால் தாமதமாவதுடன், விரைவிலேயே சோர்வடைந்தும் விடுகிறார். எனவே ஓடிவரும் தூரத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாம், முன்னாள் கப்டன் இம்ரான் கான், பயிற்சியாளர் பொப வூல்மர் ஆகியோர் அக்தருக்கு யோசனை தெரிவித்திருந்தனர்.

இதற்கு அக்தர் மறுப்புத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது -



ஒரு விமானம் வானத்தில் வேகமாக பறக்கவேண்டும் என்றால், அது தரையிலிருந்து கிளம்பும்போது வேகமாக ஓடினால் மட்டுமே பறக்கமுடியும்.

அதேபோலத்தான் எனது பந்துவீச்சும். என்னால் வழக்கம்போல் வேகமாக பந்துவீச முடியும். எனவே எனது பந்துவீச்சு முறையை மாற்றிக்கொள்ளமாட்டேன் என அக்தர் கூறினார்.

# அவுஸ்ரேலிய 'ஏ' அணியில் மீண்டும் பிரட் லீ சேர்ப்பு!

(சிட்னி)



பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கெதிராக ஜனவரியில் நடைபெறவுள்ள ஒரு நாள் போட்டியில் பங்கேற்கும் அவுஸ்ரேலிய 'ஏ' அணியில் வேகப் பந்து வீச்சாளர் பிரட் லீ சேர்க்கப் பட்டுள்ளார்.

கடைசியாக நடைபெற்ற ஏழு டெஸ்ட் போட்டிகளிலும் லீ 12 ஆவது வீரராகவே இருந்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

கடைசியாக நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஒரு நாள் ஆட்டங்கள் அவருக்குப் போதுமான பயிற்சியாக அமையும்.

இந்தப் போட்டியின் அடிப்படையிலேயே மூன்று நாடுகளுக்கு இடையிலான வி.பி தொடருக்கான அணித்தேர்வு செய்யப்படவுள்ளது என அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை அணித் தேர்வுக்குழுவின் தலைவர் டிரெவர் ஹான்ஸ் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு

# மைதானத்தில் ஆக்ரோஷம்; ஹோலுக்கு நடுவர் கண்டனம்



(போர்ட் எலிசபெத்)

இங்கிலாந்துடனான ஆட்டத்தில் மைக்கல் வோகனிடம் ஆக்ரோஷமான செய்கையைச் செய்ததாக தென்னாபிரிக்க வீரர் ஹோலை சர்வதேச கிரிக்கெட் சபை கண்டித்துள்ளது.

போர்ட் எலிசபெத்தில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மூன்றாம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து கப்டன் வோகன் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து பெவிலியனை நோக்கிச் செல்லுமாறு ஆக்ரோஷமான முறையில் செய்கையால் தெரிவித்தார் ஹோல்.

ஹோலின் இந்த நடவடிக்கை குறித்து அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த கள நடுவர்கள் டரல் ஹேர், சைமன் ரபெல், மூன்றாவது நடுவர் இயல் ஹோவெல் ஆகியோர் புகார் செய்தனர்.

இதைத் தொடர்ந்து போட்டி நடுவர் கிளைவ் லொயிட் தெரிவித்ததாவது -

ஹோல் மேற்கொண்ட ஆக்ரோஷமான நடவடிக்கை அனுமதிக்கப் படமாட்டாது. ஹோல் தனது தரப்பு விளக்கத்தை அளித்தாலும்கூட, ஐ.சி.சி விதிமுறைகளை அவர் மீறியுள்ளதாகவே கருதுகிறேன் என்றார்.

ஹோலின் இந்தச் செயல் முதல் நிலை குற்றமாகக் கருதப்படுகிறது. இதனால் அவரது சம்பளத்தில் அதிகபட்சமாக 50 சதவீதம் வரை அபராதமாக பிடிக்கப்பட வாய்ப்புள்ளது.

# பாகிஸ்தான் அணியின் படுதோல்வி; வீரர்களின் கொடும்பாவிகள் எரிப்பு!

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் போட்டித்தொடரில் பேர்த்தில் நடந்த முதல் டெஸ்டில் பாகிஸ்தான் 491 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது.

அந்த அணிக்கு 564 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் 72 ஓட்டங்களில் சுருண்டது. மக்ரா 8 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில் அந்த அணி இப்படி ஒரு மோசமான தோல்வியை சந்தித்தது கிடையாது.

இந்த மோசமான தோல்வியின் எதிரொலியால் பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் ரசிகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கராச்சி நகரில் 150 இற்கும் மேற்பட்ட ரசிகர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆத்திரமடைந்த அவர்கள் கப்டன் இன்ஸமாம், துணைக் கப்டன் யூசுப் யுகானா, பயிற்சியாளர் பொப் வூல்மர், தேர்வுகுழு தலைவர் வாசிம் பாரி ஆகியோரது கொடும்பாவிகளை எரித்தனர். மேலும் தொலைக்காட்சிகளை அடித்து நொருக்கினார்கள்.

நசீர் என்ற ரசிகர் கூறும்போது- இந்த மோசமான தோல்வி பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு கறுப்பு தினமாகும். வீரர்களின் மோசமான ஆட்டத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்கிறோம் என்றார்.

மன்சூர் ஆலம் என்ற ரசிகர் கூறும்போது - பாகிஸ்தான்அணி உடனடியாக நாடு திரும்ப வேண்டும். பயிற்சியாளர் பதவிக்கு வூல்மர் பொருத்தமானவர் இல்லை என்றார்.

இதற்கிடையே இந்த மோசமான தோல்வியைத் தொடர்ந்து கப்டன் பதவிலியிருந்து இன்ஸமாமை நீக்கவேண்டும் என்று அந் நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

முன்னாள் கப்டனும், முன்னாள் பயிற்சியாளருமான மியான்டட் - தோல்விக்கு பயிற்சியாளர் வூல்மரே காரணம் என்று குற்றம்சாட்டினார்.

இந்த தோல்விக்காக பாகிஸ்தான் அணியில் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது என்று அந் நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியார்கான் கூறியுள்ளார்.

அவுஸ்ரேலிய - பாகிஸ்தான் அணிகள் இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி மெல்பேர்னில் தொடங்குகிறது.

# ஹர்பஜனின் தூஸ்ரா; ஆய்வுசெய்ய உத்தரவு



(சிட்டகொங்)

இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சு குறித்து ஆய்வு செய்ய சர்வதேச கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது.

பங்களாதேஷ் அணிக்கு எதிராக சிட்டகொங்கில் நடைபெற்ற 2 ஆவது டெஸ்ட் போட்டியில் ஹர்பஜன்சிங்கின் 'தூஸ்ரா' பந்துவீச்சு குறித்து சந்தேகம் எழுப்பிய கள நடுவர்கள் அதன் அறிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கும், ஐ.சி.சிக்கும் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதையடுத்து, ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சு குறித்து ஆய்வுசெய்யுமாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு ஐ.சி.சி உத்தரவிட்டுள்ளது.

அதன்படி 'பயோ மெக்கானிக்ஸ்' வல்லுநர் மூலம் ஹர்பஜன்சிங் பந்துவீச்சை ஆய்வுசெய்யவுள்ளது பி.சி.சி.ஐ.

அடுத்த 6 வாரங்களுக்கு ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சு குறித்து ஆய்வு செய்யப்படலாம் எனத் தெரிகிறது. என்றாலும் அவர் போட்டிகளில் பங்கேற்பதில் மாற்றமிருக்காது.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை ஐ.சி.சியின் முடிவு குறித்து கருத்துத் தெரிவிக்க ஹர்பஜன்சிங் மறுத்துவிட்டார்.

ஹர்பஜன்சிங் 'தூஸ்ரா வகையிலான பந்தை வீசும்போது அவரது கை 22 பாகை வரை சுழல்வதாக தெரிகிறது. ஐ.சி.சியின் விதிமுறைப்படி 5 பாகை வரையே சுழற்பந்து வீச்சாளர்கள் பந்துவீச வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# போட்டிகள் நடைபெறும் இடங்களை அறிவிக்க பாகிஸ்தான் காலக்கெடு!

இந்தியாவில் நடைபெறக்கூடிய ஆட்டங்கள் நடைபெறக்கூடிய இடங்கள் குறித்து வரும் 3 ஆம் திகதிக்குள் தெரிவிக்கவேண்டும் என இந்திய கிரிக்கெட் சபையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுள்ளது.

இந்தியாவில் இந்திய அணியுடன் பெப்ரவரி 25 ஆம் திகதி முதல் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி பங்கேற்கவுள்ளது.

ஆட்டங்கள் எங்கெங்கு நடைபெறுகின்றன எனத் தெரிவித்தால், எங்களது உயர்நிலை பாதுகாப்புக் குழு ஆய்வுசெய்ய வசதியாக இருக்கும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

முன்னதாக 2 முறை இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் திகதி கொடுத்தனர். ஆனால் குறிப்பிட்ட காலத்தில் அவர்களால் நடத்த முடியவில்லை.

கிரிக்கெட் சபை தலைவர் தேர்தல் விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளதாலேயே இந்த கால தாமதம் எனத் தெரிகிறது.

மீண்டும் அவர்களிடம் ஆட்டங்கள் நடைபெறும் இடங்கள் குறித்து கேட்டுள்ளோம் என உள்ளூர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச்சில் இந்திய அணி பாகிஸ்தான் சென்றது. அப்போது இந்திய பாதுகாப்புக்குழு அங்கு சென்று ஆய்வு செய்த பின்னரே இந்திய அணி அங்கு சென்றது. அதுபோல பாகிஸ்தான் நிர்வாகம் தற்போது இந்தியாவில் ஆய்வு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

என்றாலும், மும்பையில் எந்த ஒரு ஆட்டமும் இருக்காது என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு ஏற்கனவே இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

மும்பையில் விளையாடுவதற்கு பாகிஸ்தான் அனுமதிக்காது என்பதை இந்திய கிரிக்கெட் சபை முன்னரே உணர்ந்துள்ளது.

## மொங்கியா ஓய்வு

இந்திய அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர் நயன் மொங்கியா கடந்த 2001 ஆம் ஆண்டு அணியிலிருந்து நீக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து முதல் தரப் போட்டிகளிலேயே அவர் ஆடிவந்தார்.

இந்த நிலையில் முதல் தர போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுவதாக மொங்கியா அறிவித்துள்ளார்.

ரஞ்சி டிரொபி போட்டியிலிருந்து அவர் சமீபத்தில் நீக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் இந்த முடிவை எடுத்தார். 35 வயதான மொங்கியா 44 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1,442 ஓடடங்களை எடுத்துள்ளார். 99 பிடிகளைப் பிடித்துள்ளார். 140 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 1,272 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

# இந்திய - பங்களாதேஷ் அணிகள் இன்று ஒருநாள் போட்டியில் மோதல்

இந்திய - பங்களாதேஷ் அணிகள் இடையேயான 3 ஒருநாள் போட்டித் தொடரில் முதல் போட்டி சிட்டகொங் நகரில் இன்று நடைபெறவுள்ளது. இதில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய கும்ளே, லக்ஷ்மன் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்திய - பங்களாதேஷ் அணிகள் இன்று மோதுவது 12 ஆவது போட்டியாகும். இதுவரை நடந்த 11 ஆட்டங்களிலும் இந்தியாவே வெற்றிபெற்றது.

இந்திய அணி விபரம் -

கங்கூலி (கப்டன்), ராவிட் (துணைக் கப்டன்), ஷேவாக், டெண்டுல்கர், யுவராஜ்சிங், முகமட் கை.்.வ், தினேஷ் மொங்கியா, ஸ்ரீராம், அகர்கர், சகீர்கான், முரளி கார்த்திக், ஜோகீந்தர் சர்மா.

## சின்னஞ்சிறு செய்திகள்

### கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருதுவழங்கல்

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருதுவழங்கல நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் கலாநிதி க.குணராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இநத நிகழ்வின் வாழ்த்துரையை செஞ்சொற்செல்வன் ஆறுதிருமுருகனும், சிறப்புரையை பேராசிரியர் அ.சண்முகதாசும் நிகழ்த்தவுள்ளனர். இந்த நிகழ்வில் செல்லையா மெற்றாஸ்மெயில் விருதுவழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

### அறக்கொடை விழா

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80 ஆவது பிறந்த நாள் அறக்கொடைவிழா, ஜனவரி 7 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தமுறை அறக்கொடை விழாவுடன் "சுந்தரர் தேவாரம்" என்ற 7 ஆம் திருமுறையும், வாழ்க எம் அன்னை எனும் முத்துவிழா மலரும் வெளிவரவுள்ளன.

### முடிக்குரிய காணிகள் காணியற்றோருக்கு

வடமராட்சி கிழக்கில் ஆழியவளைக் கிராமத்தில் உள்ள முடிக்குரிய காணிகளை அப்பிரதேசத்தில் வசிக்கும் காணியற்றோருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பகுதியில் உள்ள முடிக்குரிய காணிகள் ஏற்கனவே அளவீடு செய்து காணித் துண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணித்துண்டுகள், அப்பகுதியில் வசிக்கும் காணியற்றோருக்கு வழங்கப்படவுள்ளதாக அந்தப் பகுதி காணி அலுவலகம் தெரிவித்துள்ளது.

### வதிவிடச் செயலமர்வு

2005 ஆம் ஆண்டில் நூலக அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட சகல பாடசாலை அதிபர்களுக்கும் நூலக அபிவிருத்தி தகவல் தொழில்நுட்ப நூலகத்தினூடாக மேற்கொள்ளப்படவிருக்கும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக, மூன்று நாள் வதிவிடச் செயலமர்வு வலய ரீதியாக எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து நடத்தப்படவுள்ளதாக, பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவின் மாகாண இணைப்பாளர் க.அனந்தராஜ் தெரிவித்தார். (12)

### சித்திரமும் வடிவமைப்பும் இரண்டாம் அரையாண்டு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக சித்திரமும் வடிவமைப்பும் துறை மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் ஜனவரி 3ஆம், 4ஆம் திகதிகளில் நடைபெறும் பாட்சையில், முதல் நாள் 2 மணிக்கு இலங்கைக் கலை என்ற பாடமும், இரண்டாம் நாள் காலை 9.30 மணிக்கு ஆங்கிலமும் நடைபெறுமென இராமநாதன் நுண்கலைக் கழகத்தினர் தெரிவித்தனர். (91)

### பாதிக்கப்பட்டோருக்கு வீட்டுப் பாவனைப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மாதகல் ஜே/151 கிராம அலுவலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து சென்தோமஸ் பாடசாலையில் தங்கியிருந்த ஆறு குடும்பங்களுக்கு, அந்தப்பகுதி கிராம அலுவலரின் முயற்சியால் யுனிசெவ் நிறுவனம் மூலம் வீட்டுப் பாவனைப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 51 குடும்பங்களுக்கு பிளாஸ்ரிக் பாய்களும், நுளம்பு வலைகளும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு. தெய்வேந்திரம் தெரிவித்தார். (63)

## படையினர் - புலிகள் யாழ்ப்பாணத்தில் சந்திப்பு!

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறையினருக்கும், குடாநாட்டு இராணுவ கட்டளைத் தளபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

மாதாந்தம் இடம்பெறும் வழமையான சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையிலான குழுவும், படைத் தரப்பில் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமையிலான படைஅதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் குடாநாட்டின் நிலைகுறித்தும், இருதரப்பினருக்கு மிடையிலான உறவு குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அதிபராக கடைமையாற்றி தெல்லிப்பளை கல்விக்கோட்ட அதிகாரியாக பதவியுயர்வு பெற்றுச் சென்ற ச.கைலாசநாதனின் பிரிவுபசாரத்தின்போது வலிமேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (47)

## கசிப்பு உற்பத்தியாளருக்கு கடூழிய சிறைத்தண்டனை!

(சுதுமலை)

உயர் பாதுகாப்பு வலயத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட கட்டுவன் தெற்கு தெல்லிப்பளையைச் சேர்ந்த ஒருவருக்கு, மல்லாகம் மாவட்ட நீதிமன்று இரண்டு வருட கடுழியச் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டவேளை, சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் இவர் ஆஜர்படுத்தப்பட்டார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி சறோஜினி இளங்கோவன் குறிப்பிட்ட நபருக்கு ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்ப்ட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனையைத் தீர்ப்பாக வழங்கினார். (91)

## கியூடெக் நிறுவனத்தின் சமாதானத்தின் சங்கமம்!

கியூடெக் நிறுவனத்தின் மானிப்பாய் பிராந்திய சமாதானக் குழுவினர் நடத்தும் ச்மாதானத்தின் சங்கமம் எனும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு சங்குவேலி குழந்தையேசு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

சில்லாலை - மானிப்பாய் - சங்குவேலி - தாவடி ஆகிய இடங்களிலுள்ள சமாதானக் குழுவினர் ஒன்று கூடும் இந்த சங்கம நிகழ்வில் கியூடெக் நிறுவன இயக்குநர் ஜெயக்குமார் பிரதம விருந்தினராகவும், மானிப்பாய் பங்குத்தந்தை பெனடிற் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தனிநபர் சமாதானத்தின் ஊடாக குடும்ப சமூக உறவை கட்டியெழுப்பும் நோக்கில் கலைநிகழ்வுகளும், கருததுரைகளும் இடம்பெறவுள்ளன. (91)

## கசிப்பு விற்ற பெண்ணுக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம்!

(வடமராட்சி)

அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த பெண்ணொருவர் கசிப்புக் கோடாவை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின பேரில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு அவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, அவருக்கு ரூபா 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை, முத்துமாரி அம்மன் கோவிலடி அல்வாயைச் சேர்ந்த ஒருவர் 1750 மில்லிலீற்றா கசிப்பு, 30 லீற்றர் கோடா, மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் ஆகியவற்றை வைத்திருந்தமை தொடர்பாக, மதுவரித் திணைக்களத தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாம் சுற்றவாளிகள் எனக் கூறியதையடுத்து ஒவ்வொரு வழக்கிலும் தலா ஐம்பதாயிரம் காசுப்பிணையும், ஐம்பதாயிரம் பெறுமதியான இரு ஆட்பிணையிலும செல்ல பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார். (12)

## கவிந்தமிழ் மலர் வெளியீடு!

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள தமிழ்மொழிப் பிரிவின் வெளியீடான கவிந்தமிழ் மலர் - தரம் 1 ஏபி பாடசாலைகள், தரம் 1சி பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதற்காக சகல கல்விப் பணிமனைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக, வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மொழிப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் தெரிவித்தார்.

க.பொ.த உயதர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயன் படக்கூடிய பல ஆக்கங்களைக் கொண்டுள்ள இந்தக் கவிந்தமிழ் இதழை பாடசாலை அதிபர்கள் தத்தமது வலயக்கல்விப் பணிமனையிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (12)

## ஆண்டு நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கலும்!

வடமராட்சிச் சுருக்கெழுத்துக் கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 17 ஆவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை மண்டபத்தில் கழகத் தலைவர் சி.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளாக 'திருப்புமுனை' என்ற நாடகமும், சுருக்கெழுத்து மேதை 'சேர் ஐசாக் பிற்மன்' என்ற வில்லிசையும் இடம்பெறவுள்ளதாக வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகச் செயலாளர் க.வ.சிவச்சந்திரதேவன் தெரிவித்தார். (12)

## தியாகசீலம் சிறுவர் பூங்காவில் முன்பள்ளி கட்டடப் பணி ஆரம்பம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேசசபைக் குட்பட்ட தியாகசீலம் சிறுவர் பூங்காவில், யாழ்.மாவட்ட முன்பள்ளிக் கலவி மேம்பாட்டு மூலவள நிலையத்துக்கான கட்டடப் பணிகள் இடம் பெற்றுவருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி உதவியுடன் 11 இலட்சம் ரூபா செலவில் இந்த மூலவள நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

தைப்பொங்கல் தினத்தன்று திறப்புவிழா இடம்பெறவுள்ளமையால், துரித கதியில் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருவதாக வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி மேம்பாட்டு நிலையத் தலைவர் சி.சிவனேசன் தெரிவித்தார்.

தியாகசீலம் சிறுவர் பூங்காவில் ஆனைக்கோட்டை முன்பள்ளி, சண்டிலிப்பாய் வலய முன்பள்ளி இணைப்பாளர் அலுவலகம் என்பன இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

## சின்னமடு கிராம அபிவிருத்திக்கு சேவா லங்கா நிறுவனம் உதவி!

பின்தங்கிய நிலையிலுள்ள சின்னமடுக் கிராமத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் தேசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சேவா லங்கா நிறுவனத்தினரால் 'பெண்கள் சக்திப்படுத்தல்' எனும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு சுய முயற்சிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகன் தலைமையில் இந்த கடன்வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சின்னமடுக்கிராமத்தை வலுப்படுத்தி அபிவிருத்தி செய்வதன் மூலம் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களுக்கு மானிய அடிப்படையில் பல உதவிகளை வழங்க சேவா லங்கா நிறுவனத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## உரிமை கோரப்படாத வாகனங்கள் ஏலத்தில்!

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இதுவரை உரிமைகோரப்படாத வாகனங்களின் ஏல விற்பனை எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்தகாலங்களில் மல்லாகம் நீதிமன்றத்தால் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் துவிச்சக்கரவண்டிகளே இவ்வாறு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

சமபந்தப்பட்டவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் உரிய ஆவணங்களுடன் சென்று உரிமை கோரமுடியுமெனவும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினர் தெரிவித்தனர். (91)

## சில்லாலை கதிரைமாதா ஆலய ஒளிவிழா!

சில்லாலை கதிரமாதா ஆலய வருடாந்த ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையில் பங்குத்தந்தை அ.ப.அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்திரு றெஜி ராஜேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக பண்டத்தரிப்பு தென்னிந்திய திருச்சபை போதகர் பத்மதயாளனும், பாடசாலை அதிபர் சறோஜினிதேவியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## விபத்தில் ஒப்பந்தகாரர் படுகாயம்

மின்திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த மின்சார சபை ஒப்பந்தகாரர் ஒருவர் மாடிக்கட்டடத்தில் இருந்து தவறிவீழ்ந்து படுகாயமடைந்த நிலை யில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்புட்டுள்ளார்.

மட்டக்களப்பு - களுவாஞ்சிக் குடியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை வடிவேலு (வயது-36) என்பவரே காயமடைந்தவராவார்.

வைத்தியசாலையில் மின்னிணைப்பு வேலைசெய்து கொண்டிருந்த வேளை தவறி வீழ்ந்தபோதே இவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வீதி திருத்தவேலைக்கு 18 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

20 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் குன்றும் - குழியுமாக இருந்துவந்த சங்கானை ஓடக்கரை வீதி திருத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென சுமார் 2 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட இந்த வீதித்திருத்தத்துக்கென பதினெட்டு லட்சம் ரூபா - வலி.மேற்கு பிரதேச செயலகததால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வீதித்திருத்த வேலைகளை சங்கானை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். (48)




# வைக்கோலில் அடங்கியிருக்கும் உரத்தை மீள்பாவனைக்கு உட்படுத்த முடியும்

விவசாயப் பாவனைக்காக உபயோகிக்கப்படும் உரங்களில் 90 வீதத்துக்கு மேற்பட்டவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படுகின்றன. இதற்காகப் பெருந்தொகைப் பணமும் செலவிடப்படுகிறது. இந்த உரப்பாவனையில் 50 வீதத்துக்கும் மேற்பட்டவை நெல்விளைச்சலின் போது உபயோகிக்கப்படுகிறது.

நெற்பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் உரவகைகளில், யூரியா, சுபர் பொஸ்பேட், மியுரியெட்ஒப் பொட்டாஸ் போன்றவை முக்கியமானவை. இவை முழுமையாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் இந்தக் குறிப்பிட்ட உரவகைகள் பயிர்ச்செய்கையின்போது பாவிக்கப்படுகிறது.

ஆனால் நெற்பயிர்ச் செய்கையில் சிறந்து விளங்கும் நாடான ஜப்பான் என்ன செய்கிறது? உரப்பாவனையைக் குறைத்து, அதற்குப் பதிலாக வைக்கோலைப் பயன்படுத்துகிறது. அதனால் உரத்துக்காக வருடந்தோறும் செலவிடும் பணத்தில் ஒரு பகுதியைச் சேமிக்கிறது ஜப்பான்.

நெற்பயிர்ச் செய்கையின்போது, மண்ணுக்கு வழங்கப்படும் இரசாயன உரம் - இயற்கையாகவே நீரில் கரைவதால் மண்ணில் இருந்து ஒரு பகுதி நீங்கிவிடும். இன்னுமொரு பகுதி மழைநீரால் கழுவிச் செல்லப்பட்டு, அருகிலுள்ள நீர்நிலைகளில் சேர்ந்து விடுகிறது. இன்னுமொரு பகுதி - பயிர்களால் உறிஞ்சிக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு உறிஞ்சப்படும் உரம் - நெற்பயிரின் தண்டுகளிலும் அடங்கியிருக்கும். பின்னர் நெற்காணிகளிலிருந்து வைக்கோல் வெளியேற்றப்படும்போது கூடவே அதுவும் அகற்றப்படுகிறது. இவ்வாறு அகற்றப்படும் வைக்கோலில் அடங்கியிருக்கும் உரத்தை, மீள் பாவனைக்கு ஜப்பான் உட்படுத்துகிறது.



### நெற்செய்கைக்கு வழங்கப்படும் உரம்

நெற்செய்கைக்கு ஒரு ஏக்கருக்கு வழங்க வேண்டிய மண்கலந்த உரத்தின் அளவு 55 கிலோகிராம் ஆகும். இதனை 15 கிலோகிராம் யூரியா, 25 கிலோ கிராம் சுபர் பொஸ்பேட், 15 கிலோ கிராம் மியூரியட் ஒப் பொட்டாசை ஒன்றாகக் கலந்தும் தயாரித்துக் கொள்ளலாம்.

மேலும் இயற்கை உரத்துடன் இரசாயன உரங்களைக் கலந்து பயன்படுத்தும் பொழுது, அவற்றின் அளவைக் குறைத்துக் கொள்ளவும் முடியும். இதற்கு இயற்கை உரமான இலைதழைகளிலான உரம், மாட்டெரு, கோழிஉரம் போன்ற உரங்களைப் பயன்படுத்தலாம்.

உதாரணமாக - ஒரு தொன் கோழி உரத்துக்கு 11 கிலோ கிராம் பொட்டாஸ்சையும், 6 கிலோ கிராம் பொஸ்பேட்டும் குறிப்பிட்ட அளவில் இருந்து குறைத்துக் கொள்ளலாம். அதே போல் மாட்டெரு உபயோகத்தின் போது, ஒரு தொன்னுக்கு 2.5 கிலோகிராம், பொட்டாசியம் 2 கிலோ கிராம் பொஸ்பேட்டையும் குறைத்துக் கொள்ளலாம். 40 கிலோகிராம் அல்பீசியா இலைகளில், ஒரு கிலோ கிராம் யூரியாவில் உள்ள நைதரசன் அடங்கியுள்ளது. எனவே 40 கிலோ கிராம் அல்பீசியா இலைகளைப் போடும் போது, மேற்கூறிய உரத்தைப் போடத் தேவையில்லை. உதாரணமாக தென்னை மரங்களுக்கு 30 கிலோகிராம் அல்பீசியா இலைகள் போடுவதாயின், யூரியா போட வேண்டிய அவசியம் இல்லை.

வைக்கோலை உரியமுறையில் உரமாக உபயோகிப்பதன் மூலம் இரசாயன உரத்தில் 30 வீதம் நைதரசனும், 100 வீதம் பொட்டாசியமும் வழங்கத் தேவையில்லை. இதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

80 புசல் அறுவடை தரும் ஒரு ஏக்கர் வயலில் கிடைக்கும் வைக்கோலின் அளவு, 1850 கிலோகிராமாகும்.

இதில் அறுவடையின்போது, வயலில் தங்கிவிடுகின்ற வைக்கோலின் அளவு 30 வீதமாகும். எனவே அறுவடை யின் போது 1300 கிலோகிராம் அளவிலான வைக்கோல் வயலிலிருந்து நீக்கப்படுகிறது.

இவ்வாறு வெளியேற்றப்படும் வைக்கோலில், 2 வீதம் பொட்டாசியம், 0.8 வீதம் நைதரசன் அடங்கியிருப்பதுடன், சிலிக்கனும் ஓரளவு அடங்கி உள்ளது. இதன்படி 80 புசல் நெல் அறுவடையில் கிடைக்கும். வயலிலிருந்து நீக்கப்படும் வைக்கோலில் 26 கிலோ கிராம் பொட்டாசியமும், 11 கிலோகிராம் நைதரசனும் அடங்கியுள்ளன. அத்துடன் சிலிக்கனும், பொஸ்பரசும் ஓரளவு அடங்கி இருக்கும். வைக்கோலை உரமாகப் பாவிக்கும்போது, இவற்றைவிட வேறு வகையான போசாக்குகளும், நெல்வயல் காணிக்குக் கிடைக்கிறது.

ஆனால், வைக்கோலை நேரடியாக வயலுக்கு உரமாக உபயோக்கிக்கும் போது, சில பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். ஏனெனில், வைக்கோல் உக்குவதற்குப் பலகாலம் எடுக்கும். எனவே குறுகிய காலத்துக்குள் வைக்கோலை உக்கவைத்து, பாவிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு போகத்திலும் கிடைக்கும் வைக்கோலின் அளவு, பல மெட்றிக் தொன்களைத் தாண்டும். ஆகவே நெ[illegible] தண்டிலும், அதனுடைய வேரிலும் அடங்கியுள்ள போசாக்கை மீண்டும் நெல் வயல் காணிக்கே வழங்க முடிந்தால், உரத்துக்குச் செலவிடும் பணத்தின் ஒரு பகுதியைச் சேமிக்க முடியும்.

இன்று விவசாயிகள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளில் ஒன்று பயிர்களுக்குச் செலவிடும் தொகையாகும். இந்தத் தொகை - அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

எனவே மிக அவதானத்துடன் உரங்ககளைப் பாவிப்பதன் மூலம் செலவைக் குறைத்துக் கொள்ளலாம். இரசாயன உரப்பாவிப்பில் இருந்து முழுமையாக நீங்க முடியாது.

ஆனால் இயன்றளவு குறைத்துக் கொள்ள முடியும். மேலும் இரசாயன உரங்களைப் பயன்படுத்தி, பெற்றுக் கொள்ளும் விளைச்சலை விட, அதி[illegible]களவு விளைச்சலை இரசாயன உரத்[illegible]டன் இயற்கை உரத்தைப் போடுவதால், பெற்றுக் கொள்ள முடியும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**சசி சந்திரகாசன்**

# யாழ்.குடாநாட்டில் - பண்ணையில் இறால் வளர்ப்புக்கான இடத்தேர்வு சம்பந்தமான கள ஆய்வு அறிக்கை

(சென்றவாரத் தொடர்ச்சி...)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள - காக்கை தீவுக்குட்பட்ட கடற்கரையை அண்டிய தரிசு நிலப்பிரதேசமும், தனியார் நிலப்பிரதேசமும் பார்வையிடப்பட்டது.

இந்தப் பிரதேசம் - இறால்வளர்ப்பதற்குப் பொருத்தமான பிரதேசம் எனத் தீர்மானிக்கப்பட்டதிற்குப் பின்வருவன காரணங்களாகத் தெரிவிக்கப்பட்டன.

☆ அராலி வீதிக்கும், கடற்கரைக்கும் இடைப்பட்ட ஏறக்குறைய 300 ஏக்கருக்கு மேற்பட்ட அரச தரிசு நிலம் காணப்படுகிறது.

☆ கடல் நீரோ் அருகில் காணப்படுவதால், நீரை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

☆ கழிவு நீரை வெளியேற்றக்கூடிய பிரதேசமாக உள்ளமை.

☆ இந்தப் பிரதேசத்துக்கு அருகாமையில் எந்தக் குடியிருப்பும் அமையப் பெறவில்லை.

☆ சூழலையும், நிலக்கீழ் நீரையும் பாதிப்படையச் செய்யாத பிரதேசம்.

☆ இந்தத் துறையுடன் தொழில் அனுபவமுள்ள தொழிலாளர்களை ஆனைக்கோட்டை, அராலி, காக்கை தீவுப் பிரதேசங்களில் இருந்து பெறக் கூடியதாக உள்ளமை.

☆ பிரதான அராலி வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. அத்துடன் யாழ்.நகருக்கு அருகாமையிலும் காணப்படுவதால், தொடர்பாடல் வசதிகளை இலகுவாகப் பெறமுடியும்.

☆ இந்தப்பிரதேசத்தின் மண்ணில் PH பெறுமானம் 0.9 ஆகவும், நீரின் PH பெறுமானம் 8.2 ஆகவும், நீரின் உவர்ப்புத் தன்மை 32 வீதமாகவும் காணப்படுகின்றது.



(தொடரும்...)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 90/= | 90/= | 100/= | 100/= | 100/= | 100/= | 100/= |
| வெண்டிக்காய் | 60/= | 70/= | 80/= | 70/= | 65/= | 60/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 70/= | 80/= | 90/= | 90/= | 100/= | 90/= |
| கத்தரிக்காய் | 60/= | 70/= | 80/= | 75/= | 60/= | 90/= | 80/= |
| பாகற்காய் | 120/= | 90/= | 100/= | 140/= | 130/= | 100/= | 100/= |
| கரட் | 120/= | 100/= | 100/= | 100/= | 100/= | 120/= | 90/= |
| பீற்றூட் | 40/= | 90/= | 100/= | * | 50/= | * | 70/= |
| முருங்கைக்காய் | * | * | * | * | * | * | * |
| வெங்காயம் | 50/= | 60/= | 60/= | 50/= | 55/= | 60/= | 60/= |
| பச்சை மிளகாய் | 60/= | 70/= | 80/= | 70/= | 65/= | 60/= | 70/= |

# தொழில்மலர்

## உணவுக்கு சுவையூட்டும் ஊறுகாய்த் தொழில்



உணவுக்குச் சுவையூட்டுவதில் ஊறுகாய் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஊறுகாய் இருந்தால் பலருக்கு உணவு வேகமாய் இறங்கிவிடும். இன்றைய அவசர வாழ்க்கையில் ஊறுகாயை வீட்டில் தயாரிக்க நேரமிருப்பதில்லை.

ஒரு சிலரைத் தவிர ஏனையோர் ஊறுகாய்க்குக் கடைகளையே நாடுகிறார்கள். எனவே ஊறுகாய் தயாரிப்பதை ஒரு சிறு தொழிலாக எடுக்கமுடியும். குறைந்த முதலீட்டில் இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம். ஆரம்பத்தில் கையில் இருக்கும் பணத்தைக்கொண்டு குடும்பத் தொழிலாகச் செய்யலாம். தொழிலில் அனுபவம், வளர்ச்சி இரண்டும் வந்த பிறகு கடனுக்கு முயற்சிக்க முடியும்.

அந்தந்தக் காலப்பகுதியில் மிக மலிவாகக் கிடைக்கும் காய்களை வாங்கி, வெட்டி, உப்பில் ஊறுவைத்துக் கொண்டால், பின்பு தேவைக்கேற்ப எடுத்துத் தயாரித்துக் கொள்ளலாம். ஊறவைக்கும் ஊறுகாய் நீண்டநாட்களுக்குப் பழுதடையாமல் இருக்க உப்பைக் கொஞ்சம் அதிகமாக கலக்க வேண்டும்.

**ஊறுகாய் பழுதடையாமல் இருக்க**

ஊறுகாய் நீண்டநாட்கள் பழுதடையாமல் இருப்பதற்கு அசிட்டிக் அசிட் அல்லது வினிகரை ஊறுகாயுடன் கலக்க வேண்டும்.

**பக்கெட் ஊறுகாய்**

பொதுவாக ஊறுகாய் போத்தல்களில் அடைக்கப்பட்டே விற்பனையாகிறது. ஆனால் தற்பொழுது எளிய முறையில் தயாரிக்கப்படும் பக்கெட் ஊறுகாயும் பெருமளவில் விற்பனை செய்யப்படுகிறது.

தயாரிக்கப்பட்ட ஊறுகாயை வெறும் பொலித்தீன் பைகளில் போட்டும் விற்பனை செய்யலாம். ஆனால் அந்தந்த ஊறுகாயின் படம்போட்ட கவர்களில் வைத்து விற்பனை செய்வது மேலும் வியாபாரத்தை அதிகரிக்கும். இத்தகைய பக்கெட் ஊறுகாய் பார்ப்பதற்கு அழகாய் இருக்கும் என்பதால், மக்கள் விரும்பிக் கொள்வனவு செய்வார்கள்.

**ஊறுகாய் தயாரிப்பது எப்படி?**

மாங்காய் ஊறுகாய் -

2-சுண்டு வெட்டிய மாங்காய்த் துண்டுகள்
11/2 மேசைக் கரண்டி உப்புத்தூள்
11/2 மேசைக் கரண்டி தேங்காய்யெண்ணெய்.
1/2 தேக்கரண்டி கடுகு.
1 தேக்கரண்டி செத்தல் மிளகாய்த்தூள்
1/2 தேக்கரண்டி வெந்தயம்.
1/4 தேக்கரண்டி மஞ்சள் தூள்.

பெருங்காயம், வெந்தயம் என்பவற்றை வறுத்து, இடிந்து, அரித்துக்கொள்ளவேண்டும்.

எண்ணெயைச் சூடாக்கி, கடுகைத் தாளித்து இதில் மாங்காய் உப்பு என்பவற்றைப் போட்டுக்கிளறி, மிகவும் மெல்லிய நெருப்பில் 5 நிடங்கள் வரை மூடிவிட்டு இறக்கவேண்டும்.

பின் மிகுதியாகவுள்ள செத்தல் மிளகாய்த்தூள் ஆகியவற்றைச் சேர்த்து ஆறிய பின் ஈரமில்லாத வாயகன்ற போத்தல்கள் அல்லது பக்கெட்டுக்களில் பொதிசெய்யவேண்டும்.

**எலுமிச்சம் பழ ஊறுகாய்.**

20 எலுமிச்சம்புழம்
1/4 சுண்டு உப்புத்தூள்
1/2 தேக்கரண்டி மஞ்சள் தூள்
2 தேக்கரண்டி செத்தல் மிளகாய்த்தூள்
1 தேக்கரண்டி வெந்தயம்

குண்டுமணியளவு பெருங்காயம், 2 மேசைக்கரண்டி நல்லெண்ணெய், 1 தேக்கரண்டி கடுகு. 10 எலுமிச்சம் புழங்களைக் கழுவி, துடைத்து ஒவ்வொன்றையும் நான்காகக் கீறி பிளவுகளில் 1/2 தேக்கரண்டி வீதம் உப்பைப் போட்டு வாயகன்ற போத்தல் அல்லது சாடியில் நிமிர்த்தி, அடுக்கி இறுக்கி மூடி 3 -4 நாட்களுக்கு ஊறி அவியவிடவேண்டும். பின்னர் எடுத்து வெயிலில் வற்றலாகும் வரை காயவைக்கவேண்டும்.

சாடியில் எஞ்சிய புளிநீருடன் 10 எலுமிச்சம் புழங்களின் சாற்றையும் சேர்த்து, இதில் பெருங்காயம் என்பவற்றை வறுத்து இடித்ததூள், மஞ்சள் தூள் முதலியவற்றைக் கரைத்துக்கொள்ள வேண்டும்.

நல்லெண்ணெயில் கடுகைத் தாளித்து இதில் மிளகாய்ப் பொடியை ஒரு நொடிப்பொழுது பொரிய விட்டு, உடனே புளிக்கரைசலையும் ஊற்றி இறக்கி ஆறியபின், ஒவ்வொரு வற்றலாக இதில் தோய்த்துக் சாடியில் இட்டு மிகுதியாகவுள்ள புளிக்கரையலையும் மேலே ஊற்றி மூடவேண்டும். வற்றல்கள் புளிக்கரையலை உறிஞ்சி ஊறியபின் உபயோகிக்கவேண்டும்.

பருவகாலத்தில் கிடைக்கும் எலுமிச்சம் புழங்களை மேலே கூறியவாறு வற்றலாக்கி வைத்துக்கொண்டு, வேண்டிய நேரத்தில் மசாலா சேர்த்து ஊறுகாய் ஆக்கிக் கொள்ளலாம்.

**ஊறுகாய் வகைகள்**

மாங்காய், எலுமிச்சை, பூண்டு, இஞ்சி, மிளகாய், தக்காளி, நாரத்தங்காய் என்று ஊறுகாய்களில் நிறைய வகைகள் இருக்கின்றன. இவற்றில் மாங்காய், எலுமிச்சை ஊறுகாய்கள் தான் பெருமளவில் விற்பனை ஆகிறது. எனவே ஆரம்பத்தில் இவற்றை மட்டும் தயாரித்து விற்பனைசெய்வது நல்லது.

**விற்பனை செய்வது எப்படி?**

தயாரித்த ஊறுகாய்களை போத்தல்களில் அல்லது வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப பைகளாக்கி, ஒரு அட்டையில் வரிசையாக வைத்து பின் அடித்து கொடுக்கலாம். வீடு வீடாகச் சென்றும் விற்பனை செய்யலாம். இந்தத் தொழிலுக்குச் சுவையுடன் சுத்தமும் முக்கியம். வீட்டிலிருந்தவாறே செய்யக்கூடிய ஒரு சிறுகைத்தொழில் ஊறுகாய்த் தயாரிப்பு. ☆

## சூழலுக்கேற்ப செயற்படுவதிலும் ஒரு நிறுவன வெற்றி தங்கியுள்ளது

வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க விரும்பும் ஒருவர்- தன்னுடைய விருப்பப்படி வியாபாரத்தை ஆரம்பிக்க முடியாது. அரச சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகளுக்கமையவே ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்க முடியும். அதன்பின்னர், போட்டி வணிகர்களின் குறுக்கீடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். சில சந்தர்ப்பங்களில் நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களின் முரண்பாடுகள், பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிவரும். இவ்வாறு ஒரு வியாபாரத்தை ஆரம்பத்தில் தொடங்கி, அதைக்கொண்டு நடத்தும் காலப்பகுதியில் பல்வேறுபட்ட கட்டுப்பாடுகள், சிக்கல்கள் ஏற்படும். எனவே ஒரு வணிக நிறுவனமானது - தன்னுடைய புற, அகச் சூழலுக்கேற்ப செயற்பட வேண்டியுள்ளது.

அரசின் கொள்கைகளும், சட்டங்களும், உரிமை வழங்குவதற்கான விதிமுறைகளும் வணிக நிறுவனங்களால் பின்பற்றப்படவேண்டும். தொழிலாளர்களின் பாதுகாப்புக்குறித்த விதிமுறைகள் பின்பற்றப்படாமல், ஒரு நிறுவனம் இயங்க முடியாது. ஒரு நாட்டின் அரசின் கட்டுப்பாட்டின் கீழ்த்தான் ஏற்றுமதி, இறக்குமதி நடைபெறுகிறது. எனவே ஒரு நிறுவனம் சர்வதேச அல்லது சர்வதேச வணிகத்தில் தன்னிச்சையாக ஈடுபட்டுவிட முடியாது. அந்த ஒழுங்கமைப்பைப் பின்பற்றவேண்டும்.



ஆட்சியில் கட்சிமாற்றம் ஏற்படும்போது, வணிகக் கொள்கையில் மாற்றம் ஏற்படுகிறது. வணிக நிறுவனங்களின் செயற்பாட்டை அது பாதிக்கிறது. அத்தகைய சூழலிலும் ஒரு வணிக நிறுவனம் தாக்குப்பிடிக்கவேண்டும். எனவே அரசின் கொள்கை வணிக நிறுவனங்களில் பாதிப்பை ஏற்படுத்தும்போது, அதைத் தாங்கும் அளவுக்கு வணிக நிறுவனங்களில் கட்டமைப்பும், மாற்று வழிமுறைகளும் இருக்கவேண்டும். இதனால்தான் தங்களுடைய தொழிலுக்குத் தொடர்பே இல்லாத துறைகளிலும், சில தொழில் நிறவனங்கள் ஈடுபட்டு அவற்றிலும் முன்னணி வகிக்கின்றன.

அரச விதிகள் பின்பற்றப்படாதுபோய், அரசும் கண்டுகொள்ளாது போனால், நீதித்துறை குறுக்கிடும். உதாரணமாக, ஒரு நிறுவனம் சுற்றுச் சூழலை மாசுபடாமல் பாதுகாக்க வேண்டும். அல்லாதுவிடின், தொழில் முனைவோர் நீதிமன்றக் குறுக்கீட்டையும் எதிர்கொண்டாக வேண்டும். எல்லாத் துறைகளிலும், தொழில்களிலும் போட்டி இன்று தவிர்க்க முடியாததாகி விட்டது. எனவே போட்டியாளர்களுடன் போட்டியிட உத்திகள் கையாளப்படவேண்டும். வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை நாணயமான வணிகத்தின்மூலம் பெறமுடியும். பொருட்களின் தரம், விலை, வியாபாரக் கழிவு, விற்பனைக்குப் பிந்திய சேவை போன்ற பல காரணிகள் போட்டியாளர்களை வணிகத்தில் வெற்றிபெற உதவுகின்றன. எந்த உத்தியை, எந்த நேரத்தில் எப்படிக் கையாளவேண்டும் என்பது போட்டியாளர்களின் செயற்பாட்டைப் பொறுத்தே அமையும். எனவே போட்டியாளர்களின் சூழலையும் ஒரு வணிக நிறுவனம் விழிப்புணர்வோடு கண்காணிக்க வேண்டியுள்ளது.

ஒரு நிறுவனம், உற்பத்தி நிறுவனமாயின், தான் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்யவேண்டும். இந்த மூலப் பொருட்களை வழங்குபவர்கள் நிறுவனத்தின் இயக்கத்துக்கு இன்றியமையாதவர்கள். எனவே அவர்களுடைய உறவு நல்ல முறையில் பாதுகாக்கப்படவேண்டும். இதேபோன்று வியாபாரம் மட்டும் செய்யும் நிறுவனங்களுக்கும் பொருள் வழங்குவோர் உறவு தேவைப்படுகிறது.

கடனடிப்படையில் பொருள் வழங்குதல், தரமான பொருள் வழங்குதல், விற்பனையாகாத பொருளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல், விற்பனைக்கழிவு அளித்தல் முதலிய பல சலுகைகளுடன் பொருள் வழங்குபவரிடம் சுமூக உறவும் இருக்கவேண்டும். இதை நிறுவன மேலாளர்கள் கவனமாகப் பாதுகாக்கவேண்டும்.

மேலும், உற்பத்தி நிறுவனம் ஒன்று தான் - உற்பத்தி செய்யும் பொருட்கள் அனைத்தையும் அந்த நிறுவனமேதான் நேரடியாக விற்பனை செய்துவிட முடியாது. விற்பனைக்கு முகவர்கள் தேவை. மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் தேவை. இவ்வாறு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்பவர்களுக்குக் கடனடிப்படையில் பொருள் வழங்குதல், விற்பனைக் கழிவு வழங்குதல், தரம் குறைந்த பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற சலுகைகளை அளித்து மொத்த, சில்லறை வியாபாரிகளுக்குத் தம்முடைய பொருட்களுக்கு முன்னுரிமையளித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும். எனவே ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் சில்லறை வணிகர்களின் பங்கையும் விழிப்புடன் கண்காணித்து வரவேண்டும். ஒரு நாட்டின் பொருளாதாரநிலை ஒவ்வொரு வியாபார நிறுவனத்தையும் பாதிக்கிறது. எனவே நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டும் இவை செயற்பட வேண்டியுள்ளது.

அதே நேரம் ஒரு வியாபார நிறுவனம் எந்தச் சமுதாயத்தில் செயற்படுகிறதோ, அந்தச் சூழலுக்கேற்ப நிறுவனமும் தன்னுடைய செயற்பாடுகளைக் கணித்துக் கொள்ளவேண்டும். கிராமப் புறத்தில் செயற்படும் நிறுவனத்துக்கும், நகர்ப்புறத்தில் செயற்படும் நிறுவனத்துக்கும் சமுதாயச் சூழல் வெவ்வேறானவை. நுகர்வுப் பொருட்களும் வெவ்வேறானவை. எனவே சூழலுக்கேற்பவும் நிறுவனங்கள் தங்கள் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

மேலும், ஒரு நிறுவனம் தான் வளருவதற்கு உறுதுணையாக உள்ள சமுதாயத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் உள்ளன. ஒரு நிறுவனம், ஈட்டுகின்ற செல்வம் அந்தச் சமுதாயத்திடமிருந்தே பெறப்பட்டது. எனவே அந்தச் சமுதாய மேம்பாட்டுக்கும் உதவவேண்டும்.

உலகில் தொழில்நுட்ப மாற்றங்களும், அறிவியல் மாற்றங்களும் வெகு வேகமாக ஏற்பட்டு வருகின்றன. அவற்றின் விளைவுகள் வணிக நிறுவனங்களையும் பாதிக்கின்றன. எனவே தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்பவும் ஒரு நிறுவனம் தன் உற்பத்தியையும், வணிகத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

வியாபார நிறுவனங்கள் அவற்றின் சூழலுக்கேற்ப செயற்பாடுகளை இயக்கினால், ஆதாயம் ஈட்டலாம். இழப்பைத் தவிர்க்கலாம். போட்டியில் வெற்றி பெறலாம். வளர்ச்சியையும், மேம்பாட்டையும் அடையலாம். இந்த விழிப்புணர்வு, புதிய வாய்ப்புக்களைக் கண்டறிந்து அவற்றில் ஈடுபடவும் உதவும்.




## வடமராட்சி - கிழக்கில் வீதி புனரமைப்பு

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் இருந்த தாளையடி - செம்பியன் பறறு வீதி, தாளையடி - வத்திராயன் வீதி ஆகியன, நிகொட் நிதியுதவியுடன் சல்லிபோட்டு திருத்தும் வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

இந்த வீதிகள் வெகுவாகப் சேதமடைந்திருந்தமையாலும், வீதையை மூடி மழைநீர், கடல் நீர் தேங்கி நின்றமையாலும் வாகனங்களும், பொதுமக்களும் கடந்த மூன்று மாதங்களாக வெகு சிரமத்தின் மத்தியிலேயே வீதியால் பிரயாணத்தை மேற்கொண்டனர். (21)

# வன்னியில் போஷாக்கின்மை அதிகம் காணப்படுகிறது உலக உணவுத்திட்ட ஆய்வில் தெரிய வந்தது!!

(கிளிநொச்சி)

உலக உணவுத்திட்டம் இலங்கையில் மேற்கொண்டிருந்த ஆய்வின்படி, போஷாக்கின்மை நாடெங்கிலும் இருக்கின்ற பிரச்சினை என்றாலும், போஷாக்கின்மை வீதம் சராசரி விகிதத்திலும் பார்க்க வன்னிப் பிரதேசத்தில் அதிகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதுபற்றி உலக உணவுத்திட்ட அதிகாரி சச்சிதானந்தம் கருத்துத் தெரிவிக்கையில் -

உலக உணவுத்திட்டத்தின்படி வன்னிப் பிரதேசத்தில் கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குப் போஷாக்குத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த ஆரம்பித்திருக்கின்றோம்.

அதன்பின் நாம் ஆய்வொன்றை மேற்கொண்டபோது, 5 வயதுக்குட்பட்ட 12 ஆயிரத்து 796 குழந்தையில் - 18.2 வீதத்தினர் வயதுக்கேற்ற வளர்ச்சி, அதாவது உயரம் குன்றியவர்களாகவும், 21. சதவீதத்தினர் உடல் வளர்ச்சியில் சீர்குலைந்தவர்களாகவும், 36.9 வீதமான குழந்தைகள் உடல் கூடியவர்களாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு நீண்ட காலமாக போஷாக்கின்மையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையை ஓரளவுக்கு நீக்க வேண்டுமானால் - உலக உணவுத் திட்டத்தோடு வேறு பல அமைப்புகளும் இணையவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி; லக்கிஸ்ரார் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவு!

(கிளிநொச்சி)

மாவீரர் ஞாபகார்த்தமாக - கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி தெரிவாகியுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் - வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி, பரந்தன் இளைஞர் வட்ட அணியை 4-3 என்ற கோல் கணக்கில் வென்று, இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. (9)

### அடிப்படை வசதியற்ற மக்கள்

மன்னார் - பெரியமடுக்கிராமமக்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்தப் பிரதேசத்தில் 75 குடும்பங்கள் வசித்து வருகின்றபோதும், அவர்களுக்கான எந்தவித அபிவீருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவிலலை.

## தேசிய எழுச்சிப் பேரவை கலந்துரையாடல்

வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினருக்கான கலந்துரையாடல் - வட்டக்கச்சி அரசியற்துறைச் செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வு வட்டக்கச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாள் பொன்னுத்துரை தலைமையில் இடம்பெற்றது.

2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், வலயரீதியாக சமகால ஆரசியல் கருத்தமர்வுகளை நடத்துவது தொடர்பாகவும் தேசிய எழுச்சிப் பேரவையினர் அடுத்த ஆண்டுக்கான செயற்பாடு பற்றியும் பேரவையின் அடுத்த ஆண்டுக்கான செயற்பாடு பற்றியும் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

## குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

ஆனையிறவு இராணுவ முகாமைந்த பகுதிக்கு அண்மையில் ஏ 9 வீதியில் மழைவெள்ளம் பெருக்கெடுத்து பாய்ந்ததால், வீதி முற்றாகச் சேதமடைந்து, பாரிய குழிகள் வீதியில் காணப்படுகின்றன.

இந்த வீதியால் செல்லும் பாரிய வாகனங்கள், பயணிகள் வாகனங்கள் வெகுசிரமத்தின் மத்தியிலேயே தமது பிரயாணத்தைத் மேற்கொள்கின்றன. (21)

# வன்னிப்பிரதேசம் முழுவதிலும் சமகால அரசியல் கருத்தரங்குகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பளைப்பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்குகளும், கலைநிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கருத்தரங்கு நேற்று முன்தினம் காலை முதல் முகமாலை, இத்தாவில், அரசர் கேணி, தம்பகாமம், பளைநகர் ஆகிய பிரதேசங்களில் தற்போதைய சமாதான நிலை தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில், சமகால அரசியல் கருத்தரங்குகளும், செங்கோல் இசைக்குழுவினரின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதேபோன்று முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலும் இந்தக் கருத்தரங்கு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு சிவசுப்பிரமணிய வித்தியாலயத்தில், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சமகால அரசியல்நிலை தொடர்பான கருத்துக்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து முல்லைத்தீவு வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வநாயகம் தலைமையில் ஆய்வரங்கு ஒன்றும் இடம்பெற்றது.





வவுனியா - முல்லைத்தீவு பிரதேச அஞ்சல் அத்தியட்சகராகவிருந்து, பிரதேசநிர்வாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்றுச்சென்ற வ.குமரகுருவுக்கு - பளை அஞ்சல் அலுவலகத்தில் அண்மையில் பாராட்டுவழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் வீ.குமரகுரு உரையாற்றுவதை முதலாவது படத்திலும், இந்த விழாவில் கலந்துகொண்ட பளை அஞ்சல் அலுவலகத்துக்குட்பட்ட உப அஞ்சலதிபர்களையும், ஊழியர்களையும் படத்தில் காணலாம். (21)

### பத்து வீடுகள் முற்றாகச் சேதம்

கிளிநொச்சி - இரணைமாதா நகரில் அண்மைக்காலமாகப் பெய்த தொடர்மழையால், 10 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இந்த நகரிலுள்ள 10 வீடுகளும் சுவர்கள் இடிந்து விழுந்து, மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன. இதனால், இந்த வீடுகளில் மக்கள் தற்போது வாழமுடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

### இரண்டு நாட்கள் படகுசேவை

கிளிநொச்சி - அக்கராயன் கோணாவில் மரப்பாலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் படகுச் சேவையை நடத்தியது.

அண்மையில் பெய்த தொடர் மழையால் அக்கராயன் குளத்து நீர் கோணாவில், ஸ்கந்தபுரவீதியை குறுக்கறுத்துப் பாய்ந்ததினால் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அந்த இடத்தில் இரண்டு நாட்கள் படகுச் சேவையை நடத்தியது.

### பஸ்தரிப்பிடம் இல்லை

மன்னார் - வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை, கள்ளியடி ஆகிய பிரதேசங்களில் பஸ் தரிப்பிடம் இன்மையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் பஸ் தரிப்பிடமின்மையால் பஸ்ஸுக்காக காத்து நிற்கும் மக்கள் - மழையிலும், வெயிலிலும், மர நிழல்களில் காத்து நிற்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துமாறு அந்தப் பிரதேசமக்கள் கேட்டுள்ளனர்.

## அடிப்படை வசதியின்றி இயங்கும் மன்னார் - மூன்றாம்பிட்டி பாடசாலை

(மன்னார்)

மன்னார் மூன்றாம்பிட்டி பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை, அடிப்படை வசதிகள் இன்மை போன்ற காரணங்களால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையான 185 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். இந்தப் பாடசாலையில் 7 ஆசிரியர்கள், தேவையான போதும் 4 ஆசிரியர்கள் மட்டுமே கல்வி கற்பித்து வருகின்றனர்.

இதேவேளை, கடந்த 7 வருடங்களுக்கு மேலாக ஆங்கில ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் சீர்குலைந்து காணப்படுகிறது.

மேலும் வகுப்பறைக் கட்டடம், ஆசிரியர் விடுதி இன்மையாலும், குடிநீர் வசதியின்மையாலும், ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதுடன், குடிநர்ப் பிரச்சனையால் தொறறு நோய்கள் ஏற்படும் அபாயமும் தோன்றியுள்ளது.

## வவுனியா - சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் மூன்று மாதங்களாக நிவாரணம் இல்லை

வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள், தமக்கு மூன்று மாதங்களாக நிவாரணங்கள் வழங்கவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களின் நிலை தொடர்பாக ஆராயச்சென்ற அதிகாரிகள், மக்களால் நீண்ட நேரமாக தடுத்து வைக்கப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமக்கு மூன்று மாதங்கள் நிவாரணங்கள் வழங்கப்படாததால், மிகவும் கஷ்ட நிலையை எதிர் நோக்குவதாகவும், உடனடியாக நிவாரணம் வழங்கப்படவேண்டும். அப்படி இல்லையென்றால் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்ந்தப்படவேண்டுமென்று கோரியே அந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக ஆராயச் சென்ற வவுனியா அரச செயலகத்தின் திட்டமிடல் கிளையின் பணிப்பாளர் திருமதி கேதீஸ்வரன் மற்றும் அந்தக் கிளையின் கணக்காளர் ஆகியோரே பொதுமக்களால் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதிகளில் ரயரைப் போட்டு எரிதது, வீதித்தடைகளை ஏற்படுததினர். பொலிஸார் எவ்வளவோ முயற்சி செய்தும் மக்களின் போராடடத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வெளிச்சவீடுகள் புனரமைக்கப்படாததால் பெரும் சிரமப்படும் கடற்தொழிலாளர்கள்

(முல்லைத்தீவு)

வடமராட்சி கிழக்குப் பிரதேச கடற்தொழிலாளர்களின் நலன்கருதி வெற்றிலைக்கேணி கோரிக்கு அண்மையில் வெளிச்சவீடு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாரி காலத்தில் கடும்மழை, மழை இருட்டுக் காலங்களில் கரையிலிருந்து சுமார் 15 கிலோமீற்றருக்கு அப்பால் கடலில் வெளிச்சம் தெரிவதாகவும், இரவு நேரத்தில் வெளிச்சத்தின் துணைமூலம் இலகுவில் கரைசேர முடிகிறதெனவும், இதனால் பெருமளவு எரிபொருட்கள் மீதமாகிறது எனவும் கடற் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் கடற்கரையோரங்களில் முல்லைத்தீவு, பருத்தித்துறை, காங்கேசன்துறை, கோவளம், ஊர்காவற்துறை, கோட்டை, குருநகர் ஆகிய வெளிச் சவீடுகளின் வெளிச்சத்தின் துணை கொண்டே கடறதொழிலாளர்கள் இரவு வேளைகளில் இலகுவாக கரைதிரும்பக் கூடியதாகவிருந்தது.

கடந்தகால போர் அனத்தங்கள் காரணமாக சகல வெளிச்ச வீடுகளும் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றபைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் இரவு நேரங்களில் கடற் தொழிலாளர்கள் இலகுவாக எந்த வித சிரமமும் இன்றிக் கரை திரும்ப வாய்ப்பு ஏற்படும். (21)

### கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - முழங்காவில் பிரதேசத்தில் கட்டாக்காலி கால் நடைகளின் , தொல்லை அதிகரித்துள்ளது.

நாச்சிக்குடாச் சந்தியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றன.

## மன்னார் - பேசாலைப்பகுதிக் கடற்பரப்பில் அத்துமீறிய இந்தியப்படகுகளால் வலைகள் நாசம்

(கிளிநொச்சி)

மன்னார் மாவட்டத்தின் பேசாலைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு அத்துமீறிப் பிரவேசித்த இந்தியப் படகுகள் - இலங்கை மீனவரகளின் படகுகளையும், மீன்பிடி வலைகளையும் சேதமாக்கின.

இதில் இந்த மாவட்ட மீனவர்கள் தமது தொழிலிலிருந்து இடைநடுவில் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் படகுகளின் தாக்குதலில் ஒரு படகு சேதமடைந்ததால், அங்கு மீனவர்கள் சுமார் ஒருமணி நேரமாகக் கடலில் நீந்திக்கரை சேர்ந்ததாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இலங்கைக் கடற்படையினர் உடனடியாக விரைந்து, இந்திய மீனவர்களைத் துரத்தியதாகவும் எனத் தெரியவருகிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

திருக்குறள்

# நமது நோக்கு

## அரசுக்கு மக்கள் கொடுத்துவரும் அழுத்தம்...

யுத்தத்திற்கான முனைப்புக்களை உடன் நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை மீண்டும் விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் எழுச்சிக் குரலும், கோரிக்கைகளும் தமிழர் பிரதேசங்களின் பல பகுதிகளிலிருந்தும் ஜனாதிபதிக்கும், அரசுக்கும் அழுத்தத்தை கொடுக்கதொடங்கியுள்ளமையானது – பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இழுபறிப்போக்கையும் காலம் கடத்தும் நடவடிக்கைகளையும் கடந்த பல மாதங்களாக கையாண்டுவரும் ஆட்சிபீடத்தவருக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகளே புதிய நிபந்தனைகளை முன்வைப்பதாகவும், ஏற்றுக்கொள்ளமுடியாத கோரிக்கைகளை சமர்ப்பித்து பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கான சூழலை தடுப்பதாகவும் அரசு பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு, தன்னை நியாயப்படுத்த முயன்றுவருகையில், பொதுமக்கள் தரப்பிலிருந்து, அதுவும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்தும்கூட பேச்சுவார்த்தையைத் துரிதப்படுத்த கோரும் குரல் எழத் தொடங்கியுள்ளமையானது அரசு எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

கடந்த சில நாட்களாகச் சமாதானத்தை வலியுறுத்தியும் அமைதிப்பேச்சுக்களைத் தொடரப்பின்னடிக்கும் அரசாங்கத்தின் போக்கினைக் கண்டித்தும், யாழ்.குடாநாட்டில் மக்கள் மேற்கொண்டுவரும் பேரணிகள், மனிதச் சங்கிலி போராட்டச் செயற்பாடுகள் தமிழ்மக்களின் சமாதானம் மீதான விசுவாசத்தை எழுச்சிபூர்வமாக வெளிப்படுத்த தொடங்கியுள்ள அதே நேரம், பேச்சுவார்த்தை தொடர்பான நடவடிக்கைகளில் பொறுப்பற்ற போக்கைக் கடைப்பிடித்துவரும் அரசின் நிஜமுகத்தையும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது.

தமிழ்மக்களின் இந்த நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு அரசு தரப்பிலிருந்தும் நியாயபூர்வமான பதில் கிடைக்குமா என்பது வேறுவிடயம். ஆனாலும், அவர்கள் தங்களது உள்ளக்குமுறல்களை, உணர்வு வெளிப்பாடுகளை, அமைதியான, இயல்பான, சுதந்திரமான அழுத்தங்கள் ஏதுமற்ற உரிமைகளுடன் கூடிய வாழ்தலுக்கான தமது எதிர்பார்ப்பை சமாதானமூலம் வென்றெடுப்பதற்கான விருப்பார்வத்தை சர்வதேச சமூகத்திற்கு உறுதியாக வெளிப்படுத்த முயன்றுள்ளார்கள்.

இதற்கு சரியானதும், உறுதியானதுமான பிரதிபலிப்பு அரசதரப்பிலிருந்தோ, ஜனாதிபதியிடமிருந்தோ கிடைக்காத பட்சத்தில் அவர்கள் தமது சுதந்திர இருப்பையும், உயிர்ப்பையும் தாமே உறுதிசெய்யத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குத் தயாராகவேண்டிவரும் என்ற செய்தியையும் கூட அவர்களின் இன்றைய எழுச்சிப்போராட்டம் உலகிற்கு உணர்த்தி நிற்கிறது என்றால் அது சரியானதே ஆகும்.

முன்றாண்டுகால சமாதான நகர்வுகள் தமிழ்மக்களின் வாழ்வில் எந்தவிதமான ஆரோக்கியமான மாற்றத்தையும் ஏற்படுத்த – தென்னிலங்கை ஆட்சிப்பீடத்தவர்களின் அதிகாரப் போட்டிகளும், மேலாதிக்க சிந்தனைகளும் எந்த வழியையும் ஏற்படுத்தாத நிலையில் – ஏமாற்றமும், விரக்தியும் உற்ற மக்கள் எழுச்சியும், உணர்ச்சியும் பொங்கச் சீற்றம்கொள்வது தவிர்க்கமுடியாத விடயமேயாகும்.

இது சிறுமைகண்டு பொங்கும் சீற்றமாகும்.

சமாதானத்திற்காகத் தமிழ்மக்கள் கெஞ்சவுமில்லை, உரிமைகளுக்காக யாசிக்கவுமில்லை. அவர்கள் நியாயத்துக்கான கோரிக்கைகளை விடத்தொடங்கியுள்ளார்கள். அவ்வளவுதான்.

அவர்கள் அரச பயங்கரவாதத்துக்கும், இராணுவ அரசியல் மற்றும் பொருளாதார அடக்குமுறைகளுக்கும் எதிராக ஆயுதம் ஏந்திப் போராடி தம் ஆற்றலை நிரூபித்தவர்கள். எனவே, அவர்கள் கையாலாகாத நிலையில் அமைதிப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள் என எவரும் கருதினால் அது அவர்களின் அறியாமையேயாகும்.

அரசு இதனைத் தட்டிக்கழிக்குமேயானால் அதன் பிரதிபலிப்பு பாரதூரமானதாகவே இருக்கும்.

இதேவேளை, மக்கள் கொடுத்துவரும் அரசுக்கான இந்த அழுத்தம் ஒருபுறமிருக்க – நோர்வே அரசு சார்பில் அந்நாட்டின் பிரதமர் ஷெல் மக்னே பொண்டவிக் சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குமாறு அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது உறுதியான நிலைப்பாடடை ஏற்கனவே நோர்வே அனுசரணையாளர் மூலம் தெளிவுபடுத்தியுள்ள நிலையில் – நோர்வே அதிபரின் இந்த அழைப்பும் ஒரு அழுத்தமாகவே உணரக்கூடியதாகவுள்ளது.

இதற்கிடையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான புதிய நிகழ்ச்சி நிரலொன்றை அரசு விடுதலைப் புலிகளுக்கு சமாதான ஏற்பாட்டாளர் எரிக் சொல்ஹெய்ம் மூலம் அனுப்பியுள்ளதாகவும், அது விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

எதுவானாலும் புதிய நிகழ்ச்சி நிரல் என்பது அரசின் மற்றுமொரு தந்திரோபாய, ஏமாற்று உத்தியாகஇருக்கக்கூடாது என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# புலிகளின் பாதுகாப்பும் போர் நிறுத்தப் பயனும் !

அநுரா பண்டாரநாயக்க சில சமயங்களில் புத்திசாலித்தனமாக உண்மை நிலைமைகளையும் சொல்லி விடுகிறார்.

மகேஸ்வரன் என்ற ஒருவர் இருக்கிறார். அவர் ஜனாதிபதிக்கு எதிராகப் பேசுகிறார். அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டு, அவர்களுக்கு நாங்கள் பாதுகாப்பளிக்கமுடியாது. அவருக்குப் பாதுகாப்பளிக்க நாங்கள் தயாராக இல்லை. புலிகள் அவருக்குப் பாதுகாப்பளிப்பார்கள் என்று அநுரா பண்டாரநாயக்க குருநாகலில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

பத்திரிகையில் வெளிவந்த இந்தச் செய்தியைப் படித்த பெட்டிக்கடைக்காரர் அநுரா சில சமயங்களில் உண்மையையும் பேசுகிறார் என்றார்.

"முன்னர் ஒரு தடவை இவர் எங்கோ ஒரு கூட்டத்தில் பேசுகையில் வெள்ளவத்தையில் ஒரு வீட்டில் புலிகள் ஆயுதங்களையும், குண்டுகளையும் கொண்டுவந்து பதுக்கி வைத்திருப்பதாகச் சொல்லியிருந்தார்" என்று அவரது வாடிக்கையாளர் ஒருவர் சீண்டினார்.

இதன் பின் கிளிநொச்சியில் உள்ளூர்பத்திரிகையாளர்களும், உள்நாட்டு-வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் கலந்து கொண்ட பிரசித்தி பெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்று நடந்தது. இந்தக் சுட்டத்தில் கலந்து கொண்ட கொழும்புப பத்திரிகையாளர் ஒருவர், வெள்ளவத்தையில் புலிகள் ஒரு வீட்டில் ஆயுதங்களையப் பதுக்கி வைத்திருப்பதாக அநுரா கூறியிருக்கிறாரே இது உண்மையா? என்று தலைவர் பிரபாகரனிடம் கேட்டார்.

அப்படியானால் அதை ஏன் அநுராபோய் வெளியே எடுக்கவில்லை? என்று தலைவர் பிரபாகரன் சிரித்துக் கொண்டே கேட்டார்.

இதன்பின் ஆயுதங்களைப் புலிகள் பதுக்கிவைத்திருப்பது பற்றி அநுரா எங்கேயும் பேசியதாகத் தெரியவில்லை என்று பெட்டிக் கடைக்காரர் விளக்கம் சொன்னார்.

மகேஸ்வரனுக்குப் புலிகள் பாதுகாப்பு வழங்குவார்கள் என்று அநுரா கூறியிருப்பது புலிகளைச் சீண்டுவதற்கா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியைக் நோண்டுவதற்கா என்று கேட்டுத் துருவினார் வாடிக்கையாளர்.

மகேஸ்வரனுக்கு மட்டுமல்ல இப்பொழுது தமிழர் தாயகத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் தான் பெரும்பான்மையான மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்தப் பகுதிகளில் இரவிலும் குமர்ப்பெண்கள் கூட நகைகளை அணிந்து கொண்டு கோயில் திருவிழாக்களுக்கும் கலியாண வீடுகளுக்கும் பயமில்லாமல் போய்வருகுதுகள். இப்படி யாழ்ப்பாணத்திலும் சிறிது காலம் புலிகளின் பாதுகாப்பில் நல்லூர் திருவிழாவுக்கும் கூடப் பெண்கள் கழுத்து நிறைய நகைகளைப் போட்டுக் கொண்டு அச்சமில்லாமல் போய்வந்ததும் உண்டு என்று கடைக்காரர் தொடர்ந்தார்.

கிட்டடியில் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த ஒரு பெண்நாடு திரும்பியதும் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் தான் பார்த்தவைகளை ஒரு பத்திரிகையில் எழுதியிருந்ததை நீங்கள் பார்த்தனீங்களோ என்று வாடிக்கையாளர் மீண்டும் தூண்டிவிட்டார்.

ஓமோம் நான் பார்த்தனான். படிச்சனான் ரேவதி என்று பெயர் போட்டிருந்தது. அதை யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒரு பத்திரிகை எடுத்துப் பிரசுரித்திருந்தது.

அந்தப் பெண் வன்னியில் மக்கள் சுதந்திரமாக அச்சமின்றித் திரிவதை மட்டுமல்ல புலிகளை அந்தப் பகுதியில் ஆயுதங்களுடன் தான் பார்க்கவில்லையென்றும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இலங்கைப் படையினர் ஆயுதங்களுடன் சுற்றித்திரிந்ததைப் பார்த்ததாகவும் எழுதியிருந்தார். வன்னியில் பெண் பிள்ளைகள் சுதந்திரமாக நடமாடினார்கள் ஒருவரும் திரும்பிப் பார்க்கவில்லை யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவரே ஒரு பெண்பிள்ளையைக் கிண்டல் செய்ததைப் பார்த்ததாகவும் எழுதியிருந்தார்.

இதேசமயம் வவுனியாவில் வாங்கிய அதே உணவுப் பொருட்கள் வன்னியில் மலிவாக விற்கப்பட்டன என்றும் ரேவதி எழுதியிருந்தார் என்றார் கடைக்காரர்.

மகேஸ்வரனுக்கு மட்டுமல்ல நாட்டில் தமிழ் மக்கள் அனைவருக்குமே புலிகள் பாதுகாப்பளிப்பார்கள். இப்பொழுது நாட்டில் நடைபெறும் கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள், பெண்களை மானபங்கம் செய்தல் போன்ற சகல தீய செயல்களும் பெரும்பாலும் பாதுகாப்புப் படைகள் நிலை கொண்டிருக்கும் இடங்களிலேதானே நடக்கின்றன. இவையட பாதுகாப்பு என்ன?

இவர்கள் தங்களைப் பாதுகாக்கவே பெரும்பாடுபடுகின்றனர். இவர்கள் எப்படி மக்களைப் பாதுகாப்பார்கள்? என்றார் வாடிக்கையாளர்.

தங்களுடைய பலவீனத்தை மறைப்பதற்காகத்தான் சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளும் அவர்களுடைய ஊடகங்களும் எங்கே கொலை, கொள்ளை, கடத்தல் நடந்தாலும் புலிகள்தான் செய்தார்கள் என்று பிரசாரம் செய்கின்றனர்.

பிள்ளைகளைக் கடத்துகிறார்கள். இளம் பிள்ளைகளைப் படையில் கட்டாயமாகச் சேர்க்கிறார்கள் என்று ஊடகங்கள எழுதிக்கொண்டே தொடர்ந்தும் பிரசாரம் செய்துவருகின்றன. ஜெனிவாவிலும் வெளிநாட்டில் வாழும் சிங்கள இனவாதிகள் இந்தப் பிரசாரத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.

சமீபத்தில் ஜெனிவாவில் ஐ.நா.அலுவலகம் முன் புலிகள் சிறுவர்களையும் படையில் சேர்க்கிறார்கள் எனறு ஒரு சிறுவன சுவரொட்டியைப் பிடித்துக்கொண்டிருப்பதாகப் பத்திரிகை படம் வெளியிட்டிருந்தது என்று வாடிக்கையாளர் சொன்னார்.

தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு இனப்படுகொலைகள் இலங்கையில் நடந்தபோது கண்ணையும், வாயையும் மூடிக் கொண்டிருந்த அயல் நாட்டவர்களும் இலங்கையில் புலிகள் கொலை செய்கிறார்களென்று கூட்டம் கூடிப்பேசியும், அறிக்கை விட்டும் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதில் முனைப்பாக இருக்கிறார்கள் என்று பதிலுக்குச் சொன்னார் கடைக்காரர். அவரே தொடர்ந்தார்.

அமைதிப் படையென்று இங்கேவந்து ஆக்கிரமிப்பாளராக மாறியவர்கள் இங்கேயிருந்து வெளியேறிய சமயத்தில் ஈழத்துக்காக ஆயுதம் ஏந்திப் பின்னர் திசைமாறித் தங்கள் வழியைப் பார்த்தவர்கள் இந்திய இராணுவத்தின் நிழலிலேயே தமக்கொரு படையைத் திரட்டுவதற்கு ஆட்களைப் பிடித்ததையும் மக்கள் மறந்துவிட்டார்களோ?

சந்தியிலும், தெருவிலும் தங்கள் பிள்ளைகளை இவர்கள் இழுத்துச் சென்றபோது அவர்களுடன் மல்லுக்கட்டி உடலிலும் உள்ளத்திலும் காயமடைந்த பெற்றோர்கள் எத்தனைபேர.

பஸ்ஸிலும், ரயிலிலும் பிள்ளைகளை வேறு இடங்களுக்குப் பயமில்லாமல் அனுப்பமுடியாது பெற்றோர் தங்களிடமிருந்த உடமைகளைக்கூட விற்று விமானத்தில் பிள்ளைகளைக் கொழும்புக்கு அனுப்பிக் காப்பாற்றிய பெற்றோர் பலர்.

வேறு இடங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பிக் காப்பாற்றமுடியாத பெற்றோர்கள் பலர். தங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றும்படி விடுதலைப் புலிகளிடமே ஒப்படைத்தார்களென்பது அயல் நாட்டிலுள்ளவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அல்லது மறந்து போயிருக்கலாம். ஆனால் இங்குள்ளவர்கள் மறந்து விடமுடியுமா?

சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள் ஆதிக்க சக்திகளாக இருக்கும்போது பொய்ப் பிரசாரத்துக்கு சக்தி அதிகம் தான் என்றார் வாடிக்கையாளர். அவர்களிருக்கட்டும் எங்கடை ஆட்கள் இதையெல்லாம் யோசிக்காமல் அவங்களுக்கு உடந்தையாக இருப்பதை என்னவென்று சொல்வது. இவர்கள் தாங்களாகவும் எதுவும் செய்யமுடியாது. மற்றவர்கள் துணிவுடன் செய்வதற்குக் கெடுதியாவது செய்யாமலிருக்கலாமல்லவா? என்றார் கடைக்காரர்.

செயல்வீரன் பிரபாகரன் தலைமையில் தமிழன் இப்பொழுது தனக்கென ஒரு நாட்டை உருவாக்காமல்விட்டால் இனி என்றைக்குமே உலகில் தமிழனுக்கென்று ஒரு சுதந்திர நாடு அமையப்போவதில்லை என்றார் வாடிக்கையாளர.

அதுசரி நாளைக்கு நத்தார்க் கொண்டாட்டமல்லோ என்ற கடைக்காரர் நாங்கள் கடந்த மூன்றுவருடங்களாகத்தானே நத்தாரை அமைதியான சூழலில் சந்தோஷமாகக் கொண்டாடுகிறோம் என்று தொடர்ந்தார்.

மூன்றாம் வருடம்தானே விடுதலைப் புலிகள் தாங்களாகவே ஒரு தலைப்பட் சமாகப் போர்நிறுத்தம் செய்வதாக அறிவித்து அமைதியைக் கொண்டுவந்தனர்.

இன்று போர் நிறுத்தத்தினால் இலாபமடைபவர்களும் சுதந்திரமாக நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றுவருபவர்கள்கூட இந்த அமைதி தற்காலிகமாக இருந்தாலும் அதை ஏற்படுத்திக்கொடுத்த விடுதலைப் புலிகளுக்கு நன்றி சொல்கிறார்களா? என்று கவலையுடன் கேட்டார்கள் கடைக்காரர்களும், வாடிக்கையாளர்களும்.

ஆன்மீக அறிவியல்... -எஸ்.ஜெயா-

# ஆன்மீகத்தை ஆக்கிரமிக்கும் வர்த்தக விளம்பரங்கள்

## ஆன்மீகச் சிந்தனையை வர்த்தக வழிச்சிந்தனை ஆக்குகின்றனவா ?

ஒவ்வொரு ஆலயமும் தமது திருவிழாக் காலங்களில் அந்த ஊரினதும், அந்த ஆலயத்தினதும் பெருமைகளையும், பழமையையும், அற்புத ஆன்மீக வரலாறுகளையும் அறியும் முகமாகவும் அந்த ஆலயம்சார்ந்த பிரதேச கலாசாரப் பண்பாடுகளையும், ஆன்மீக அகநிலைவாதிகளையும் வெளிக்காட்டும் முகமாகவும், புதிய ஆன்மீக கலாசாரத்தை மூடநம்பிக்கைகளிலிருந்து விடுவிக்கு முகமாகவும் திருவிழா மலரை வெளியிடுவது வழமையானதும், தேவையானதும் ஒன்றாகும். இதை மாற்றுக் கருத்துக் கொண்டு வாதிடச் சந்தர்ப்பம் இல்லை எனலாம்.

ஆனால் கடந்தகாலங்களிலும்சரி, ஏன் நிகழ் காலத்திலும்கூட பத்திரிகைகளில் திருவிழாமலர்கள் வெகுசிறப்பாக வெளிவந்த வண்ணமேயுள்ளன. இந்த ஆலயங்கள், விழா மலரின் செலவீனங்களைச் சமன் செய்வதற்காகக் கொடை மனம்படைத்தோர் மற்றும் வர்த்தக நிறுவனங்களை நாடுகின்றன. அல்லது இந்த மலரை வெளியிடுவோர் நாடுகின்றனர்.

இங்கேதான் பிரச்சினைகளுக்குக்களம் அமைகின்றன. விழா மலருக்கு நிதி பெற்றுக் கொண்டதற்குப் பிரதி உபகாரமாக அவர்களின் வர்த்தக விளம்பரங்கள் அந்த மலரை ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

இதன் காரணமாக அந்த ஊர்ப் பெருமைகளையோ அல்லது கலாசாரப் பண்பாடுகளையோ வெளிக்காட்ட இடம் போதாதிருப்பதுடன், ஆன்மீக உணர்வு சிதறடிக்கப்பட்டு, மேலான புலனுணர்வுகள் கவர்ச்சியான விளம்பரங்களால் கீழ்மட்டச் சிந்தனைச் சகதிக்குள் சிக்கித்தவிக்கும் நிலையைத் தாற்றி, இது ஆனமீகம் எனும் ஆலய களத்தை வியாபாரமாக்கிவிட்டு அடியவர்களைக் கவர்ச்சி நுகர்வோராக்கி ஆன்மீகத்தில் வர்த்தக வாணிபம் ஒன்றை உருக்கொள்ள வைத்து, மட்டுப்படுத்தப்படாத மானிட ஆசைகளைக் கட்டுப்பாடில்லாத வணிகப் போர் ஒன்றினுள் நுழைப்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆன்மீகம் என்பது அவர் அவர் அறிவுக்கும், ஞானத்துக்கும், தேவைக்கும் எட்டியதொனறாகும். இதனால் ஆன்மீகத்தில் எல்லோரது முடிவுகளும் ஒன்றுக்குள் ஒன்றிப்போக வேண்டிய கட்டாய நிலை ஒன்றில்லை. ஆனால் இறுதி முடிவு உறுதியானதாக அமையும்.

வர்த்தகம் அப்படிப்பட்டதல்ல. குறுகிய ஆசைகளையும், பரந்த தேவைகளையும், கிடைக்கும வருவாயையும் கொண்டு வளமான வாழ்வை நோக்கி நகர்த்தப்படும் ஓர் சிககல்பாடு நிறைந்த வாழ்வு முறையாகும். இங்கு எல்லோரிடமும் கண்ணியமும், கட்டுப்பாடும் இருக்குமென எதிர்பார்க்க முடியாது. ஆனால் இலாபம் என்பதே பிரதான குறியாக இருக்கும்.

இப்படிப்பட்ட இரு துருவங்களை ஒரே மலரில் சமர்க்களப்படுத்துவதேன்? நன்றிப் பெருக்கா? ஆன்மீகத்திலும் விளம்பரத் தேடலா? அல்லது வியாபார உத்தியா? ஏனெனில் பல மலர்களில் மதுபானக்கடை விளம்பரங்கள், சிகரெட்கடை விளம்பரங்களும் இருக்கின்றனவே? இப்படியேபோனால் இறைச்சிக்கடை விளம்பரமும் வராது என்பதற்கு என்ன நிச்சயம்?

சிதைந்துபோன சமூகத்தை ஒழுங்கமைப்பது ஆன்மீக சிந்தனை என்றால், இவையெல்லாம் ஒழுங்குபடும் சமூகத்தைச் சிதைவுப் பாதையை நோக்கி உந்துவனவா? உதாரணமாக இன்றைய விடலைப்பருவ நடவடிக்கைகளுக்கு இதுவுமொரு காரணமாகலாம் அல்லவா? (மதுக்கடை விளம்பரம் அங்கு நோக்கி ஈரககலாம்.)

வணிகத்தில் நேர்மையையோ அலலது அமைதியையோ எதிர்பார்க்க முடியாது. ஆனால ஆன்மீகம் நேர்மைத் தன்மையும் ஆதேவேளை அமைதிப் போக்கும் கொண்டது. இந்த இடத்தில் விளம்பரம் எதற்கு? ஆன்மீகத்தில் அதன் பணியில் கைமாறு எதிர்பார்ப்பது சரியானதா? இப்படியே விளம்பர உலகம் செல்லுமாக இருந்தால் இனிவரும் காலங்களில் "கடவுளின்" உருவங்களையே "மொடலிங்" செய்வதற்குக்கூடப் பயன்படுத்தலாம். அப்படியானால் பெண் தெய்வ உருக்களின் நிலை வர்த்தக உலகில் வேறுவகைக் கண்ணோட்டத்தில்கூட நோக்கப்படலாம் அல்லவா? இது தேவைதானா எமது சமூகத்துக்கு.

அண்மைக் காலங்களில் பல ஆலயங்களின் மலர் அமைப்பானது பல வர்ணங்களில் வெளிவந்திருக்கின்றன. இவற்றுக்கான செலவு ஒரு பக்கத்துக்கு (5 கொலம்) கலர் என்றால் 22,000 ரூபாவும், கறுப்பு - வெள்ளை என்றால் 10,000 ரூபாவும் அறவிடப்படுகின்றது. இது பத்திரிகைகளின் அளவுக்கு ஏற்ப கட்டணம் அதிகரிக்கும். அப்படியானால் ஒவ்வொரு ஆலய மலர்களையும் எடுத்துப் பாருங்களேன். எத்தனை இலட்சங்கள் செலவு செய்துள்ளனர் என்று. இந்த விழா மலருக்காகச் செலவிடப்பட்ட பெருந்தொகை நிதியை சமூகப் பெறுமானம் கருதி ஏதேனும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியிருக்கலாமே. இவை எல்லாம். மக்கள் மனங்களில் எழும் வினாக்கள் அல்லவா.

ஏனெனில் இந்த மலரை எடுத்துக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் சுமார் நான்கு பக்க விழாமலரில் ஆன்மீகம் பற்றிய கருத்தூனறல் ஓர் பக்கம்தான் தேறும் ஏனையவை அனைத்தும் வர்த்தக விளம்பரங்களே. விளம்பரம் செய்ய எத்தனையோ வழிகள், உத்திகள் உள்ள போதும் ஆன்மீகத்தைப் பயன்படுத்துவதேன்?

ஆன்மீகம் என்பது விளம்பரப்படுத்தப்பட வேண்டியதொன்றல்ல. விளக்கம் காணவேணடியது. தேடிப் பெறக்கூடியதொன்றல்ல. தேவை யின்பால் ஈர்ப்பது. இதனால்தான் "செய்யும் தொழிலே தெய்வம்" என்று சான்றோர் கூறியுள்ளனர்.

ஆனால் திருவிழா மலருக்குப் பெருந்தொகை நன்கொடை கொடுத்துத் தமது விளம்பரங்களைச் செய்வதன்மூலம் தமது பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டு விட்டதாக எண்கிறார்களா? ஆண்டவன் சேவையில் அடியவர்கள் விளம்பரம் தேட நினைபது சரியா? மக்கள் சேவையே மகேஸவரன் (ஈசன்) சேவை என நினைப்பதே பெருந்தன்மை. நாம் கொடுப்பது நன்கொடை என நினைத்தால் விளம்பரம் தே[illegible] நினைப்பது தவறானதாகவே புரியும்.

ஆனால் குறைந்த முதலீட்டுடன் சிறந்த விளம்பரம் உரிய சமூகப் பெறுமானத்துடன கிடைப்பதாகப் பலர் கருதுவதாகத் தெரிகின்றது. இதுவே இன்று ஆன்மீ கத்தை வர்த்தக விளம்பரங்கள் ஆக்கிரமிக்கக் காரணமாகி விட்டதெனலாம். இது காலப் போக்கில் ஆன்மீகத்தை ஓர் விளம்பரச் சந்தையாக்கிவிடும். இதனால் இதற்குச் சமூக ஆற்றுப்படுத்தல் ஒன்று அவசியம்

---

செய்திக் கட்டுரை... க.தர்ஜனன்

# புனரமைக்கப்படாத நிலையில் மருதங்கேணி பொதுச் சந்தை

தாளையடி மருதங்கேணிப் பொதுச் சந்தை இதுவரை காலமும் புனரமைக்கப்படாததால அந்தப் பகுதி மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்தகால யுத்த சூழ்நிலையில் இந்தக் கிராமம் முழுவதும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. இந்தக் கால கட்டத்தல் இராணுவ ஆக்கிரமிப்பில் சநதைக்குரிய அனைத்துக கட்டடங்களும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன.

இந்தச் சந்தைக்குரிய அனைத்துக் கட்டடப் பகுதிகளும் இராணுவம் அங்கிருந்த காலப் பகுதியில் இராணுவக் காவலரண்களாக இருந்தன.

தற்போது விடுவிக்கப்பட்ட இந்தப் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறது. விடுவிக்கப்பட்டபோது சிதைவடைநத காவலரண்கள் தற்போதும அகற்றபபடாது காணபபடுகின்றன. இவற்றைவிட புல், பூண்டுகள் முளைத்து சந்தைக்குரிய கட்டடப் பகுதி முழுவதும் ஒரே குப்பை கூழமாக காட்சி தருவதுடன் அந்தப் பகுதியில் வெடி பொருட்களும் - கண்ணிவெடிகளும இருப்பதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் மக்கள் மீளக் குடிய மர்ந்து 4 வருடங்களுக்கு மேலாகின்ற பொழுதும் இந்தச் சந்தை புனரமைக்கப்படாமல் உள்ளது.

இதனால் அந்தப் பகுதியில் சந்தை வசதியின்றி மக்கள் பெரும் சிரமங்களை எதிர நோக்கி வருகின்றனர். A-9 பிரதான சாலைக்கும் இந்தப் பகுதிக்கும் இடையேயான தூரம் 5 கிலோ மீற்றருக்கு மேலாக உள்ள இதேவேளை பிரதானசாலையிலிருந்து சிலமைல் அப்பாலுள்ள பளைப் பகுதிச் சந்தைக்கோ அலலது பலமைல் தூரமுள்ள கிளிநொச்சி சநதைக்கோ செல்ல வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது. அத்தோடு இந்தப் பகுதி வீதிகள் மிகமோசமாகசேதமடைந்துள்ளன. 10 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாதுள்ள வீதிகளிலேயே மக்கள் சைக்கிளிலோ நடந்தோ பயணித்து வரவேண்டிய கட்டாயம் உளளது.

அத்துடன் முன்பு இந்தச் சந்தையை நோககியே அருகிலுள்ள கிராமங்களான செம்பியன் பற்று, மாமுனை, கட்டைக்காடு போன்றவற்றிலிருந்து, மக்கள் தமது மரக்கறிகளை விற்பனை செய்யவும் வாங்கவும் நாடிவந்திருக்கின்றனர்.

இதனால் இந்தச் சந்தையை புனரமைத்து மக்களுக்கு வேண்டிய தேவைகளை நிறைவு செய்வதென்பது மிக அத்தியாவசியமான தொன்று. அத்துடன் இந்தப் பகுதியில் மக்களில் பெரும்பாலானோர் கடற்றொழிலையும், விவசாயத்தையும் நம்பி உள்ளனர். எனவே இவர்களின் பொருட்களை விற்பனை செய்யச் சந்தை ஒன்று மிக அத்தியாவசியம்.

சிலவேளைகளில் இரவு நேரங்களில் பிடிக்கப்படும் மீனவகைகள் போக்குவரதது்சிக்கல், சந்தை வசதி இல்லாததன் காரணமாக வேறிடஙகளுக்கு கொண்டு செலலும் போது பழுதடைந்து விடுகின்றன. இதனால் பெரும் நஷ்டங்கள் ஏற்படுகின்றன என மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது இந்தக் கிராமங்களில் இருந்து இடம் பெயர்ந்து வேறிடங்களில் வசித்தவர்கள் ஏராளமானோர் மீளக்குடியமர்ந்து வருகினறனர்.

எனவே இவர்களின் தேவைகளும் அதிகமாகி வருகின்றன. மீள் குடியேற்றம் நடை பெற்று வரும் இந்தப் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பல நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே இந்த அபிவிருத்தித் திட்டங்களில் இந்தச் சந்தையையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் சந்தையருகில் தற்போது தற்காலிகமாக சில வியாபாரிகள் கொட்டிலமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் நிலையோ பரிதாபம். தற்போது மாரிகாலம் ஆரம்பித்துள்ளமையால், மழையால் இவர்களின் பொருட்கள் அனைத்தும் நனைந்து இவர்களுக்கு பெரும் சிரமங்களைக் கொடுககின்றது.

ஒருநாள் விற்றதன் பின் மீதி மரக்கறிகளைப் பழுதடையாமல் வைக்க இவர்களுக்கு இடமில்லை. பளையிலோ வேறிடங்களிலிருந்தோ கொண்டு வரப்படும் இவற்றை திரும்பவும் கொண்டு செல்ல வேண்டிய நிலையே சில வேளைகளில் ஏற்படுகின்றது.

இந்தப் பகுதி மக்கள் பழுதடைந்ததோ, நல்லதோ இவற்றையே வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

முன்பு பருத்தித்துறை நாகர் கோவில் ஊடான பாதை உள்ள காலத்தில் மருதங்கேணிச் சந்தை மிகப் பிரபல்யம் பெற்றிருந்தது. தேங்காய், மீன் என்பவற்றுக்குப் பிரபலமான இந்தப் பிரதேசம் இன்று தெனனைகளை இழந்தநிலையில் காட்சியளிக்கிறது.

முன்பு ஒரு முறை இந்தச் சந்தையைப் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அனைத்தும் கைவிடப்பட்டு இன்று அழிந்து வருகிறது.

அத்தோடு இந்தப் பகுதிக்குரிய போக்குவரத்திற்கான பேருந்துப் பணியும் மிகக் குறைவாக இருப்பதால் வேறிடங்களுக்குச் செனறோ குறித்த நேரத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யவோ முடியாதுள்ளதாக இவர்கள் கூறுகின்றனர்.

பின் தங்கிய பிரதேசமாக இருந்து வரும் இந்தப் பிரதேசத்தில் தற்போது மீள் கட்டுமாணப் பணிகள் நடந்து வருகின்றன. எனவே அவற்றுள் இந்தப் கிராமதிற்கு மிக அத்தியாவசியமான மருதங்கேணிப் பொதுச் சந்தையை புனரமைத்து மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆவன செய்யுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டிநிற்கின்றனர்.

# ஈராக்கின் மொசூல் நகரிலுள்ள அமெரிக்க முகாம் மீது தாக்குதல்!

## 24 படையினர் ஸ்தலத்தில் பலி





(பாக்தாத்)

ஈராக்கின் மொசூல் நகரில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவ முகாம் மீது இஸ்லாமிய தீவிரவாதிகள் நடத்திய ரொக்கட் தாக்குதலில் 18 அமெரிக்கப் படையினர் மற்றும் 6 ஈராக்கிய படையினரென 24 பேர் கொல்லப்பட்டும் 90 பேருக்கு மேல் காயமடைந்துமுள்ளனர்.

இந்த இராணுவ முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் மதிய உணவை அருந்திக் கொண்டிருக்கும்போதே கிளர்ச்சிவாதிகள் அடுத்தடுத்து மூன்று ரொக்கட் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலை அல் கொய்டா அமைப்பின் ஆதரவுக் குழுவொன்று நடத்தியதாக உரிமை கோரியுள்ளது.

இதேவேளை அமெரிக்கப் படையினர் மீதான இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார். வன்செயல்கள் தொடர்ந்தாலும் ஈராக்கில் அடுத்த மாதம் திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறுமெனவும் அவர் தெரிவித்தார்.




# கைதுசெய்யப்பட்ட சர்தாரி பிணையில் விடுதலையானார்!

(கராச்சி)

பாகிஸ்தான் பொலிஸாரால் மீண்டும் வேறொரு குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிரின் கணவர் அசீவ் அலி சர்தாரி பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இவர் மீண்டும் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இவரது இந்த வீட்டுக் காவல் மீதான தடை நேற்று மாலைநீக்கப்பட இருந்ததாக அவரது சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

தமது இந்தக் கைது குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த சர்தாரி -

இது நீதித்துறைக்குப் புறம்பாக எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை எனத் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டு கராச்சியில் நீதிபதி மற்றும் அவரது மகன் கொலை தொடர்பாக சர்தாரி நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்தார் எனத் தெரிவித்தே இவர் மீண்டும் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 7500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனித எலும்புக்கூடு கண்டுபிடிப்பு!

7ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனின் எலும்புக்கூடு ஒன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் கண்டெடுக்கப்பட்டது.

தலைநகர் அபுதாபியில் இருந்து 100 கி.மீ தொலைவிலுள்ள மார்வா தீவில் இது புதைக்கப்பட்டிருந்தது. அந்த மனிதன் இறந்தபோது 20 முதல் 40 வயதுக்குள் இருக்கும்.

இந்தத் தீவில் அகழ்வாராய்ச்சிக்காக பல ஆண்டுகளாக நிலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. அப்போது கட்டடங்களின் இடிந்த பகுதி பாத்திரங்களின் உடைந்த பகுதி ஆகியவையும் கண்டு எடுக்கப்பட்டன.

# பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் இஸ்ரேலுக்கு விஜயம் செய்தார்!



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திற்குச் சென்ற பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் அந்த விஜயத்தை முடித்துக்கொண்டு இஸ்ரேலுக்குச் சென்றுள்ளார்.

அங்கு அவர் பிரதமர் ஏரியல் ஷரோனுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இதன்படி காஸா பகுதியிலிருந்து இஸ்ரேலிய படைகள் பின்வாங்குதல் மற்றும் மத்திய கிழக்கிற்கான சமாதான முயற்சிகளுக்கான கலந்துரையாடல் முன்மொழிவு என்பன தொடர்பாகவும் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் பலஸ்தீனம் சென்ற பிரதமர் ரொனி பளேயர், அங்கு தற்போதைய பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் முகமட் அப்பாசுடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த ரொனி பிளேயர் - இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்குமிடையில் நிலவும் முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

பிரதமர் ரொனி பிளேயர் இஸ்ரேலுக்கு சென்ற அதேநேரம் இஸ்ரேலிய தாங்கிகள் கான்யுனிஸ் அகதிமுகாமிற்குள் பிரவேசித்து தாக்குதலை மேற்கொண்டதில் பலஸ்தீன கிளர்ச்சிவாதி ஒருவர் கொல்லபபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஆனாலும் தமது படையினரும் தாங்கிகளும் இந்த குடியிருப்புப் பகுதிக்குள் பிரவேசித்தது, அங்கிருந்து கிளர்ச்சிவாதிகள் இஸ்ரேல் பகுதிக்குள் நடத்தும் றொக்கட் தாக்குதலை நிறுத்தவே என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.


**சகல தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களுக்கும்**

"கிழக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்திற்கு வடக்கு உறவுகளின் உதவிப்பயணம்"

**கிழக்கிலே ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்குவதற்காக ஒவ்வொரு தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**உதவிப் பொருட்கள்**

1. உலர் உணவு 2. பால்மா வகைகள்
3. சிறுவர்களுக்கான புதிய உடைகள் என்பனவற்றை நாளை (வெள்ளி) மாலை 6 மணிக்கு முன்னர் கன்னாதிட்டியில் உள்ள "சயன்ஸ் கோல்" கல்வி நிறுவனத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விசேட குறிப்பு**

1. ஒன்றியத்தின் முன்னனுமதி இல்லாமல் புதிய கல்வி நிறுவனங்களை (பொது, பிரத்தியேக) ஆரம்பிக்க முடியாது.
2. இயக்குநர்கள் உங்கள் முத்திரை அளவிலான கலர் புகைப்படம் ஒன்றை எமது இணைப்பாளரிடம் 27.12.2004 முன் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
3. பிரத்தியேக வகுப்பு என்பது தனி ஒரு ஆசிரியர் 10 க்கு உட்பட்ட மாணவர்களுக்கு நடத்தும் கற்கைநெறி என்பதனை கவனத்தில் கொள்க.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். நல்லூர் பிரதேசம். (C\3511) செயலாளர்



**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த



**ஜெய் சூர்யா**

கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின் காடின் - 326, K.K.S.றோட் யாழ்ப்பாணம்



**திறைஞ்சனைஸ்** சங்கானை

தனுஷ், தியா நடித்த

**ட்ரீம்ஸ்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
THE MUMMY RETURNS



**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.

(குளிரூட்டப்பட்டது)
விக்ரம், கிரன், மனோரமா நடித்த

**ஜெமினி** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30,2.30 மட்டும் (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.00 (பு.நே) மட்டும்
THE MUMMY RETURNS ஆங்கிலப் படம்



**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்
சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த

**சத்ரபதி** (ரீல்ஸ்)

புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 மட்டும்
நாளை முதல் அர்ஜுன், ரீமாசென் நடித்த
**கிரி** (இயக்கம் சுந்தர்C)



**வர்த்தகப் பெருமக்களே!**
**ஆசிரியப் பெருந்தகைகளே!**
**மாணவ மணிகளே!**
**எங்கள் 46 ஆம் வருட அகவையை முன்னிட்டு**



**அட்டகாசமான மலிவு விற்பனை**

புத்தகங்களுக்கு 20 வீதம் தொடக்கம் 70 வீதம் வரையும், உபகரணங்களுக்கு 10 வீதம் கழிவும் வழங்கப்படும். இந்தியப் புத்தகங்களுக்கு 3 மடங்கும், 20 வீதம் கழிவும் வழங்கப்படும்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.2225542

(C/3500)



**மீண்டும் புதிய பொலிவுடன் இன்று கோலாகல ஆரம்பம்**



AM "அல்பா மிக்சர்"

**வியாபார நிலையத் திறப்பு விழா**
**இன்று 23.12.04 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.**
**வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

-நன்றி-

அல்பா மிக்சர்
140, பலாலி வீதி,
(யாழ். பல்கலைக்கழக சந்தி)
திருநெல்வேலி.

தொ.பே - 2226695

C/3506

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமெரிக்க பாதுகாப்பு ஆய்வாளர்களின் யாழ். குடாநாட்டு விஜயத்துக்கு பொது அமைப்புக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க பாதுகாப்பு ஆய்வாளர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விஜயம்செய்து இங்குள்ள பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்ந்துள்ளமையைப் யாழ்ப்பாண மாவட்ட பொது அமைபபுக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், இது தொடர்பான அறிக்கையையும் அமெரிக்க மற்றும் சாவதேச நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்துள்ளன.

யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதற்கிணங்க அனைத்து காவல் அரண்களும், மக்கள் குடியிருப்பிலுள்ள இராணுவ அத்துமீறல்களும் படிப்படியாக அகற்றப்படவேண்டும். ஆனால், எதிர்வுகூறப்பட்ட எதுவும் நடைபெறவில்லை. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்களும், மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற பொது அமைப்புக்களும் பல போராட்டங்களை நடத்திவருகின்ற இந்த வேளையில் யுத்தத்துக்கான முஸ்தீபு வேலைத்திட்டங்களை இலங்கை அரசின் அனுசரணையுடன் அமெரிக்க அரசின் இராணுவ, அரசியல் ஆய்வாளர்கள் எமது தாயகப் பிரதேசத்தில உள்ள இராணுவ முகாம்களையும், காவலரண்களையும் பார்வையிட்ட நடவடிக்கையானது போர்மோகம் கொண்ட செயற்பாடாகவே கருதுகின்றோம்.

போர்நிறுத்த ஒப்பந்தமும் சமாதான உடன்படிக்கையும் செத்துவிடுமோ என்ற அங்கலாய்ப்பில் எமது மக்களும் சர்வதேசமும் ஏங்கிக்கொண்டிருக்கும் இந்தவேளையில் அமெரிக்க அரசின் இராணுவ ஆய்வாளர்களின் இரகசிய விஜயம் சமாதானத்தின் மீதான நம்பிக்கையை இழக்கவைப்பதுடன், மீண்டும் போர் ஏக்கம் மக்கள் மத்தியில் ஏற்படவும் வழிவகுக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வெளியிட்ட அறிக்கையில் -

இலங்கை பெரும்பான்மைக் கட்சிகளின் ஆட்சியதிகாரப் போட்டியாலும், தமிழ் மக்களை அழித்தொழிக்கவேண்டும் என்ற சிங்கள பேரினவாதத்தின் அடிப்படைக் கொள்கையினாலும் இனப்பிரச்சினைக்கு எந்தவித முடிவுமின்றி, தீர்வுமின்றி இன்று போருமற்ற சமாதானமுமற்ற சூழல் மக்கள் மத்தியில் போர்ப்பீதியை உருவாக்கியுள்ளது.

யாழ்.குடாநாடெங்கும் சமாதானத்தை வலியுறுத்தி மக்கள் மனித சங்கிலிப் போராட்டங்களை நடத்துகின்ற இந்தவேளையில், சமாதானத்தையும் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் சிதறடிப்பதாகவே அமெரிக்க படை அதிகாரிகளின் வருகையும், முகமாலை முன்னணி காவல் நிலைகளைச் சென்று பார்வையிட்டமையும் இராணுவத்துக்கான ஆலோசனை வழங்கலும் அமைகின்றன.

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அமெரிக்க அரசானது இந்த வகையான சமாதானத்தைப் பாதிக்கும் செயற்பாடுகளைக் கைவிட்டு உடனடியாகத் தமிழீழத் தேசியத் தலைவர் மாவீரர் நாள் உரையில் குறிப்பிட்டதுபோல இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க உண்மையான அழுத்தத்தை அரசுக்குக் கொடுக்கவேணடும். இல்லையேல் தமிழ் மக்கள் தமது விடுதலைக்கான அவர்களது தன்மானத்தை நிலைநாட்டுவதற்காக தேசியத் தலைவரின் வழியிலே சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில்-

போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடையும் தருணத்தில் போருமற்ற, சமாதானமுமற்ற காலப்பகுதியில் மக்களின் சுமுக நிலை தோன்றாத சூழலில் மீண்டும் போர் மூழாமல், சமாதானத்தை வலியுறுத்தி எமது மக்கள் அரசுக்கு எதிராக சாத்வீக, வெகுஜன போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

உலக நாடுகள் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை நடைமுறைப் படுத்தவேண்டுமென அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இவ்வேளையில் அமெரிக்க பாதுகாப்பு ஆய்வாளர்கள் குடாநாட்டுக்கு இரகசியமாக வருகைதந்து இராணுவ முன்னரங்குகளுக்கு விஜயம்செய்து பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்வது, இலங்கையில் மீண்டும் போர் நடவடிக்கைகளுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்து மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையம் வெளியிட்ட அறிக்கையில் -

அமெரிக்கா நடுநிலையாக, நியாயமாக நடந்துகொள்ளும் என்றே நாம் திடமாக நம்புகின்றோம். அப்படியான சூழ்நிலையில் அது சிக்கலில் ஒரு பக்கம் சாய்கிறதாவென அச்சமுறும் வகையில் இந்த விஜயங்கள் அமைகின்றன.

இவ்வாறான பக்கச்சார்பாக தோற்றும் நடவடிக்கைகளை தவிர்த்து, எமது நியாயமான விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து, ஜே.வி.பி போன்ற இனவாத, தோல்வியுற்ற கம்யூனிச தத்துவவாதிகளை புறந்தள்ளி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்குமாறு அரசையும் தென்னிலங்கை அரசியல் சக்திகளையும் வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது பெரும் பிரச்சினையல்ல. நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின்படி கூட மூலப் பிரேரணையாக ஒரு விடயத்தை எடுத்தால் மாற்றங்கள் திருத்தங்களை விவாதத்தின்போதே சமர்ப்பிக்கலாம்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளையும் அப்படியான மூலப் பிரேரணையாக கருதி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதுமலையில் கத்திக்குத்து; இளைஞர் பரிதாப மரணம்!

(மானிப்பாய்)

சுதுமலை அம்மன் கோயில் பகுதியில் நேற்று இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

மானிப்பாய் - சுதுமலை அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த சீவரத்தினம் லவன் (வயது 24) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

சுதுமலை வீதியில் வசித்துவந்த உயிரிழந்த நபருக்கும், அவரைக் கத்தியால் குத்திய மானிப்பாய் அந்தோனியார் கோயிலடியைச் சேர்ந்த நபருக்கும் இடையே நீண்ட நாட்களாகப் பகைமை உணர்வு நீடித்து வந்தது. கத்தியால் குத்திய நபரும் அவரது சகோதரரும் நேற்று மோட டார் சைக்கிளில் சென்ற சமயம் உயிரிழந்த குறிப்பிட்ட நபருடன் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மரணமடைந்த நபர் குறிப்பிட்ட நபரைத் தாக்கிய வேளையில், அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் மார்புப் பகுதியில் குத்திவிட்டுத் தப்பியோட முறபட்டுள்ளார். இந்த வேளையில் அவரைத் துரத்திச் சென்ற இளைஞர்கள் மடக்கிப்பிடித்ததுடன், நையப்புடைத்தனர். சம்பவ இடத்துக்கு வந்த மானிப்பாய். அரசியற்துறையினர் குறிப்பிட்ட நபரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

# ஜயந்த தனபால நேற்று அம்பாறைக்கு விஜயம்

(அம்பாறை)

அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்று அம்பாறை மாவட்டத்துக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

ஆறு மாவட்டங்களுக்கான கொள்கை விஜயத்தின் ஒரு கட்டமாகவே அவரது விஜயம் அமைந்ததாக சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்த சமாதான செயலகப் பணிப்பாளர், அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் றோய்மோர் அஸ்ராவைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட அரச அதிபரைச் சந்தித்து உரையாடிய சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால - பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

# கொழும்புத் துறைமுகமருகே ஓட்டோவில் சென்றோர் கைது

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தினுள் பிரவேசிக்க முயன்றதாக கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரை ஓட்டோவுடன் கடற்டையினர் கைதுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொழும்பு துறைமுகத்தினுள் சேரம் கேற் சோதனைச் சாவடி ஊடாகப் பிரவேசிக்க முயன்ற ஓட்டோ ஒன்றை இரண்டு பயணிகள், சாரதியுடன் கடற்படையினர் பிடித்தனர்.

இளங்கோ பிரசாத் மற்றும் நவநீத கிருஷ்ணன் (கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்) என்ற இரு பயணிகளையும் ஓட்டோ சாரதியான பண்டாரவளையைச் சேர்ந்த யோகராஜன் என்ற சாரதியுமே கைது செய்யப்பட்டனர்.

இரவு நேரத்தில் குறிப்பிட்ட பகுதியூடாக பிரயாணம் செய்ததற்கு போதிய காரணம் எதையும் காட்டாததால் இவர்களை மேலதிக விசாரணைகளுக்காக கடற்படையினர் மோதரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

# ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை தடைசெய்யும் சட்டம் நாடாளுமன்றில்!

சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை உத்தியோகபூர்வமாக தடைசெய்யும் பிரேரணை வெகுவிரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தற்போது நாட்டில் அமுலில் உள்ள குடிவரவு குடியகல்வு சட்டத்தின்படி சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்புபவர் குற்றவாளியாகக் காணப்படுவதற்கு வாய்ப்பில்லை. எனவே, இவற்றை உத்தியோகபூர்வமாக தடைசெய்யும் முகமாக இப்பிரேரணை நாடாளுமன்றில் அங்கீ காரத்துக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## ஜே.வி.பி. விடுத்த...

காரணத்தாலேயே உதவி வழங்கும் நாடுகளின் அறிக்கையில் விடுதலைப் புலிகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடவில்லை.

ஆனால், ஜே.வி.பியின் கடிதத்தில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தொடர்பாக அமெரிக்கா தூர விலகியே இருப்பதாகவும், விடுதலைப் புலிகள் தொடர்பாக இரண்டு கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகவும் ஜே.வி.பியின் கடிதத்தில் சுட்டிக் காட்டியிருந்தது. ஆனால், அமெரிக்காவைப பொறுத்தவரை விடுதலைப புலிகள் தமது அரசியல் எதிரிகளைக் கொல்வதை நிறுத்த வேண்டும், சிறுவர்களைப் படையில் இணைக்கக்கூடாது, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளத்தொடங்குவதற்கு அவர்கள் நெகிழ்ச்சித் தன்மையைக கடைப்பிடிக்கவேண்டும்.

இவற்றை அவர்கள் கைவிடுவார்களாக இருந்தால் அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலிலிருந்து அவர்களை விலக்கமுடியும். ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளை நெகிழ்ச்சித் தன்மையுடன் அணுகுவதாகவும் அமெரிக்கத் தூதுவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி...

வித்துள்ளது.

ஜனாதிபதி நேற்றுபிற்பகல் 2.30 மணிக்கு யூ.எல். 503 என்ற விமானத்தில் லண்டன் நோக்கிப் புறப்பட்டுச் சென்றதாகத் தெரியவருகிறது. (01)

## போராளி...

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## அரசின் போக்கை...

டைகளைத் தாங்கியவாறு வீதியின் இரண்டு பக்கங்களிலும் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ் மக்கள் விரும்பும் சமாதானத்தை அரசாங்கம் கட்டாயம் வழங்கவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கைதடி மக்களின் எழுச்சிப் போராட்டம் காரணமாக சுமார் ஒரு மணிநேரமாக அப்பகுதியில் வழமை நிலை ஸ்தம்பிதமடைந்திருந்தது.

தென்மராட்சி மக்களின் அடுத்த மனித சங்கிலிப் போராட்டம் நாளை கொடிகாமத்தில் இடம்பெறவுள்ளது. முதல் போராட்டம் கடந்த திங்கட் கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நோர்வே தூதரகம் இன்று மீண்டும் திறப்பு

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் இன்று மீண்டும் திறக்கப்படவுள்ளதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

அந்திராக்ஸ் கிருமியென்று சந்தேகிக்கப்பட்ட வெண்ணிறத் தூள் ஒன்று கடந்த வாரம் கொழும்பிலுள்ள தூதரகத்துக்கு அனுப்பப்பட்டதையடுத்து தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டது.

எனினும் இது தொடர்பாக ஒஸ்லோவில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் அந்திராக்ஸ் கிருமி எதுவும் தூதரகத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அடங்கியிருக்கவில்லையென்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே இன்று தூதரகம் திறக கப்படவுள்ளதாக ஹெல்கிசன் மேலும் தெரிவித்தார்.

## அரசாங்கத்தின்...

வரைபு இருக்கின்ற நிலையில், சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து புதிய நிகழ்ச்சி நிரலைத் தயாரித்திருக்கின்றபோதும், அரசாங்கம் இடைக்கால வரைபையும் இறுதித் தீர்வையும் இணைத்து பேச்சு நடத்துவதென்ற நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை என்றும் புலிகளின் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

அரசாங்கத்தின் இந்த புதிய நிகழ்ச்சிநிரலை ஆராய்ந்த புலிகளின் தலைமைப்பீடம் - இது தொடர்பான பதிலை விரைவில் அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்க விருப்பதாகவும் தெரியவருகிறது.

## இடம்பெயர்ந்தோர்...

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு அரசு இதுவரை எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது குறித்து அரசின் மீது முற்றாக நம்பிக்கை இழந்த நிலையில் - கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்து வருகின்ற அரசு மீளக் குடியமர்வதற்கு அனுமதிப்பதாகப் பல செய்திகளை வெளியிட்டும் அதனை நடைமுறைப் படுத்தவில்லை.

இதனால் நாம் அரசின் மீது முற்றாக நம்பிக்கை இழந்துள்ளோம். இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் மக்கள் போராட்டங்களை நடத்தப்போவதாகவும் இதற்கு நாம் தயாராகவே உள்ளோம் எனவும், இந்தச் சந்திப்பில் இடம்பெயர்ந்தோர் சங்கங்களின் சமாசத்தினர் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பின் முடிவில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

இந்தச் சந்திப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.